# சீன துணைப்பிரதமரும் கொம்யூனிஸ்ட் அதிகாரிகளும் சிறைப்பிடிக்கப்பட்டனர்

Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily

மலர் 9 (13-1-67) இதழ் 334

பராபவ ஷவ்வால் 1 மார்கழி 29 வெள்ளிக்கிழமை

ஹொங்கொங், ஜன. 12 சீனத் துணைப்பிரதமர் லோபிபோவும் ஆறு கம்யூனிஸ்ட் கட்சி உயர் அதிகாரிகளும் செங்காவலரால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கன்டெனில் இவர்கள் செங்காவலரினால் கைது செய்யப்பட்டு பீகிங்குக்குக் கொண்டுவரப்பட்டனர் என்றும் பீகிங்கில்லாது காப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இங்கு கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறைப்பிடிக்கப்பட்ட துணைப்பிரதமர் அரசாங்க பொருளாதாரத் தலைவருமாவார்.

இதற்கிடையே கடந்தசில தினங்களாகக் காணாமற்போன ரயில்வே மந்திரியைக் குறைகூற வேண்டாமென்றும் அவரைக் கொண்டுவந்து விடுமாறும் பிரதமர் சூ-என்-லாய் செங்காவலரைக் கேட்டுள்ளார். இவர் 4 தினங்களுக்கு முன்னர் செங்காவலரினால் இழுத்துச் செல்லப்பட்டதாகவும் ஒரு இடத்தில் மறைத்து வைக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. பாதிக்கப்பட்ட ரயில் சேவைகள் இன்றும் சீரில்லை.

## ஜி. ஜி. யாழ். நகருக்கு 26-ல் வருவார்

யாழ்ப்பாணம், வெள்ளி இம்மாதம் 26-ம் தேதி யாழ்ப்பாணம் எம். பி. திரு ஜி. ஜி. பொன்னம்பலம் யாழ்ப்பாணம் வருவார். தமிழ் காங்கிரஸ் சார்பிலும் யாழ்ப்பாணத் தொகுதி மக்கள் சார்பிலும் வரவேற்பளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

# நெல் எடுத்துச்செல்ல விரைவில் தடைவரும்

## கடத்தலைத் தடுக்க அரசாங்கம் திட்டம்

கொழும்பு, வியா நெல்விளைச்சல் அதிகமாக உள்ள இடங்களிலிருந்து வெளியிடங்களுக்கு நெல் எடுத்துச்செல்வதற்கு விரைவில் தடைவிதிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் விரைவில் இத்தடுப்புமுறை அமுலுக்கு வருமென்றும் அறியப்படுகிறது.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அரிசி கடத்தப்படுவதாகக் கூறப்படும் புகார்களைத் தொடர்ந்தே இத்தடைப்புநடவடிக்கை பற்றி அரசாங்கம் தீர்மானித்திருக்கிறதாகத் தெரிகிறது. ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு நெல் கொண்டு செல்வதற்கு வடக்கு, கிழக்கு மாகாணப் பகுதிகளிலேயே பெரும்பாலும் தடை விதிக்கப்படுமெனத் தெரிகிறது. வடக்கு கிழக்கு மாகாணப் பகுதிகளிலிருந்தே இந்தியாவுக்கு அரிசி கடத்தப்படுவதாக அரசாங்கத்துக்கு தகவல் கிடைத்திருக்கிறதாம்.

மகாபோக அறுவடைக் காலம் ஆரம்பமாகிறது. இச்சமயத்தில்தான் தடைவிதிக்கப்படவேண்டுமென உணவு இலாகா கருதுகிறது.

இம்முறை இலங்கையின் சமீககாலச் சரித்திரத்தில் இல்லாதவாறு பெருமளவு நெல் அறுவடைசெய்யப்படுமெனவும் உணவு இலாகா எதிர்பார்க்கிறது.

## மட்டக்களப்பில் அமைக்கப்படும் முதலாவது நியாய விலைக்கடை

மட்டக்களப்பு, வியா மட்டக்களப்பில் நியாய விலைமீன்கடை இம் மாதத்தில் திறக்கப்படவிருக்கிறது. கடந்த வருடம் செப்டம்பரில் கைத்தொழில் மந்திரி திரு. பிலிப்குணவர்த்தன மட்டக்களப்புக்கு விஜயம் செய்தபோது, இதனை திறவித்தருவதாக வாக்குறுதி அளித்திருந்தார் கிழக்கு மாகாணத்தில் முதலாவதாகத் திறக்கப்படும் நியாய விலைமீன்கடை இங்குதான் திறக்கப்படுகிறது.

## கண்டி கிரிக்கெட்கோஷ்டி யாழ்ப்பாண விஜயம்

குரும்பசிட்டி, வியா கண்டிசென். சில்வெஸ்டர் கல்லூரிக்கிரிக்கெட்கோஷ்டி அடுத்தமாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும்.

யாழ் மத்தியகல்லூரியினருடன் பெப்ரவரிமாதம் 10, 11ந்திகதிகளிலும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியுடன் 13ம், 14ம் திகதிகளிலும் கிரிக்கெட் போட்டிகளில்கலந்துகொள்வர். பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி சென் ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றுடனும் போட்டியிடுவர். இந்தப் போட்டிகள் இரண்டும் கண்டி நகரில் நடைபெறும்.

மனோஹரா

(14 - 1 - 67)

மகத்தான பொங்கல் வெளியீடு

கிளியோபட்ரா

அரசாங்கஅதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா அவர்களால் பிற்பகல் 2-30 மணிக்கு திறப்பு விழா வைபவம் சிறப்பிக்கப்படும்.

(2-30 காட்சி அழைப்பாளர்களுக்கு மட்டும்)

பல்கனி ஆசனங்களுக்குரிய ரிக்கட்டுகள் முன்கூட்டியே பெற்றுக்கொள்ளலாம்.

தினசரி காட்சிகள் 3-45, 7-00, 10-00.

போயா தினத்திலும் அதற்குமுதல் நாளும் காலை 10-30 க்கும்.

## வேலைநிறுத்தம் செய்ய முடிவு

கொழும்பு, வியா முன் இம் மாதம் 16-ந் திகதி அடையாள வேலைநிறுத்தம் செய்வதென்றும் கொழும்புத் துறைமுகத்திலிருந்து தேயிலை ஏற்றுமதி செய்வதைப் பகிஷ்கரிப்பதென்றும் இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்க பொதுச் சபை நேற்றிரவு தீர்மானித்தது.

16-ந் திகதி மாலை மைடோர்க்கில் நடைபெறும் கூட்டத்தில் தீர்மானம் அங்கீகரிக்கப்படவிருக்கிறது.

## நெசவுநிலையங்கள்

வண்டத்தர்ப்பு, வியா மாதகலில் நிறுவப்பட்டிருக்கும் நெசவு நிலையம் சென் தோமஸ் நெசவு நிலையம் என்ற பெயருடனும் இளவாலையில் நிறுவப்பட்டிருக்கும் நெசவு நிலையம் சென் ஜேம்ஸ்நெசவுநிலையம் என்ற பெயருடனும் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி, வியா. தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியர் திரு க. அம்பலவாணர் ஏழாலை அரசினர் மகாவித்தியாலயத் தலைமையாசிரியராகப் பதவியுயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

முஸ்லிம் அன்பர்களுக்கு

எமது

'ஈத்' தின வாழ்த்துக்கள்

## நோன்பிருக்கும் முஸ்லிம்கள் தூய்மை பெறுகின்றனர்

'நோன்பிருக்கும் முஸ்லிம்கள் தூய்மை பெறுகின்றனர் ஆத்மீக இலௌகீக பயனடைகின்றனர் இதனால் இவ்வுலகிலும் அல்லாஹ்வின் அருளைப் பெறுகின்றனர்' என்று "ஈதுல் பித்ர்" நோன்புப் பெருநாளை முன்னிட்டு அகில இலங்கை முஸ்லிம் லீக் தலைவர் டாக்டர் எம். ஸி. எம். கலீல் விடுத்துள்ள செய்தியொன்றில் தெரிவித்துள்ளார்.

'விரதம் அனுஷ்டிப்பவர்களில் எல்லோரும் ஒரே காரணத்தைக் கொண்டிருப்பதில்லை. சிலர் சோகம் துக்கம் ஆகியவைகளுக்காக விரதம் இருக்கின்றனர். சிலர் அரசாங்கத்திடமோ தனிப்பட்டோரிடமோ இருந்து சலுகைகள், உரிமைகள் சரியானதோ சரியில்லாததோ பெற்றுக்கொள்ள உண்ணாவிரதமிருக்கின்றனர். வேறு சிலர் தங்களின் இலட்சியம் நிறைவேற நோன்பிருக்கின்றனர். இப்படிப் பல விதம். ஆனால் அன்றைய நபிமார்களோ, தெய்வீகக் கட்டளை பெறுவதற்கும் தம்மை தூய்மைப்படுத்திக்கொள்ளும் முறையாக 40 நாட்கள் தொடர்ந்து நோன்பிருந்துள்ளனர்' என்றும் அவர் தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

## முஸ்லிம் மக்களின் பணி குறித்து தொழில் மந்திரி

தொழில் வீடமைப்பு மந்திரி திரு. எம். எச். முகம்மது விடுத்துள்ள 'ஈத்' வாழ்த்துச் செய்தியில், நாட்டில் நிலவும் நெருக்கடியை உணர்ந்து ஈழத்து முஸ்லிம் மக்கள் தேசப்பற்றுடன் நடந்துகொள்ளவேண்டும் என்றும், இது தேசியசேவையாவதோடு மதக்கோட்பாட்டுச் சாயலும் தோய்ந்துள்ள ஒரு மகத்தான பணியாகக் கொள்ளவேண்டும் என்றும் கேட்டுள்ளார்

உண்ணா நோன்பிருந்து முஸ்லிம்கள் பெற்ற பயிற்சி அற்புதமானது நாம் வேலைவேளைக்கு குறைவின்றி ... இல்லை ... முற்றிலும் மூன்று வேளை நீக்கிவிடமுடியும் என்ற மன உறுதியைப் பெற்றுள்ள நாம் எமக்கு ஏற்படும் ... தயக்கமின்றி ... செய்யக்கூடிய மன ... பெறுகிறோம் என்று மந்திரி தமது ... செய்தியில் தெரிவித்துள்ளார்.

## "இஸ்லாத்தின் தனிச் சிறப்பு"

மூதூர் முதல் எம். பி. திரு. எம். ஈ. எச். முகம்மதலி விடுத்துள்ள வாழ்த்துச்செய்தியில், ஈகைக் குணத்தை வளர்ப்பதற்கென்றே முஸ்லிம்களுக்கு 'ஈதுல் பித்ர்' என்ற ஈகைப் பெருநாள் விதியாக்கப்பட்டிருக்கிறதென்றும் ஈகைக்கென்றே ஒரு நாளை ஒதுக்கி அந்த நாளைப் பெருநாளாகக் கொண்டாட விதியாக்கியிருப்பது இஸ்லாத்தின் தனிச் சிறப்புக்களில் ஒன்றாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தானும் வாழ்ந்து அயலாரும் வாழ்ந்து நாடு செழிப்படைய உழைப்பதாக இந்த புனித நாளில் முஸ்லிம்கள் சங்கற்பம் செய்துகொள்ள வேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார்.

[(8ம் பக்கம் பார்க்க)]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

மனேஜர்

பிராயப்பற்றை சரவணபதி வை. தோ. க. சங்கத்திற்கு ஒரு மனேச்சர் தேவை. சம்பளம் ரூபா 90/- (எல்லாம் உட்பட) வயது 20 தொடக்கம் 40 வரையும். தராதரம் J. S. C. கூட்டுறவுப்பயிற்சிக் கலாசாலைப் பத்திரம் தேவை. பிணை ஆதனம் ரூபா 2,000/- ரொக்கம் ரூபா 1000/- இம் மாதம் 30-ம் திகதிக்குள் விண்ணப்பிக்கவும், காரியதரிசி, பிராயப்பற்றை வை. தோ. க. சங்கம், பண்டத்தருப்பு. 2227

### விற்பனைக்கு

கோழிக்குஞ்சுகள்:

இனம் பிரிக்காத ஒருநாள் குஞ்சுகள் Unsexed) பதிவு செய்யாது பெற்றுக் கொள்ளலாம். விலை தும் எழுபத்தைந்து (75) அடு ஐ ஏஜன்சி, அளவெட்டி. 2207

வான்

A 30 டிலிவரி வான். C V 5018. நல்ல நிலையில். நேரில் வரவும். கே. இராசலிங்கம், 28, நீராவியடி, யாழ்ப்பாணம். 2242

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 9-45
லீவு தினங்களில் 4 காட்சிகள்
GUN HAWK
(Color by Delux)

மகாத்மா தியேட்டர்
நெல்லியடி
வோயாதினமும் முதல் நாளும் காலை 10 மணி மெட்னி
S.S.R.— விஜயகுமாரி
நடித்த
வழிகாட்டி

REGAL—JAFFNA
NOW SHOWING
Melina Mercouri
Peter Ustinou
in
TOPKAPI
(Eastman Color)

## வட்டக்கச்சிக்கு தொலைபேசித்தொடர்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

வட்டக்கச்சி உப தபால் நிலையத் தொலைபேசித் தொடர்பை, கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் நேற்றுக்காலை ஆரம்பித்துவைத்தார்.

இவ்விழாவில் தொலைபேசி பொறியியலாளர் திரு. யோகதாசன், கிளிநொச்சிப்பகுதி காரியாதிகாரி திரு. எஸ். யோகநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி எம். பீ., முதல்முதலாக, கொழும்பு பிரதம பொறியியலாளர் திரு. திருநாவுக்கரசுடன் தொடர்புகொண்டு தொலைபேசிச் சேவையை ஆரம்பித்துவைத்தார். உத்தியோகபூர்வமாகத் தமிழ்த் தந்திமொன்றையும் அனுப்பி வைத்தார்.

## காணித்தகராறு ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், வெள்ளி

காணித்தகராறினால் ஏற்பட்ட கைகலப்பின் காரணமாக கோண்டாவிலைச் சேர்ந்த ஆண்டி சின்னப்பொடி என்றநபர் (52வயது) கடு காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது சம்பந்தமாக பொலிசார் நடத்திய விசாரணையின்போது இதே இடத்தைச் சேர்ந்தகதிரவேலு நடேசன் நாகன் இலிங்கம், ஐயாத்துரை ஆகியோரே இவருக்கு மண்வெட்டியால் அடித்து மண்டையில் பலத்த காயங்களை உண்டுபண்ணியதாக தெரியவந்துள்ளது. பொலிசார் மேலும் புலன்விசாரணை செய்கின்றனர். (ந. நி.)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
ஆனந்த ஜெயரத்தின
காந்திகுணத்துங்க
நடித்த
சன்தேசய (சிங்களம்)

யாதவா
(மூளாய்)
தினசரி 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
தெய்வத்தாய்

யாழ்ப்பாணத்தில்

## மாணவர் வேலைத்திட்ட தினம்

யாழ்ப்பாணம், வெள்ளி

"இவ்வளவு காலமும் கல்விமுறை ஒரு குறிப்பிட்ட நோக்குக்காகவே இருந்தது. ஆனால் தற்போது தேசிய உணர்வும், நாட்டுப்பற்றும் நிறைந்த கல்விமுறை உருவாக்கப்பட்டதனால் நான் இன்று உணவு உற்பத்தியைப் பெருக்கும் நோக்கமாக இங்கு கூடியுள்ளோம்"

கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட மாணவர் வேலைத்திட்ட தினத்தில் அதிபர் திரு. சிவலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

ஆசிரியர்களும், மாணவர்களும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதைத் தொடர்ந்து மாணவர்கள் நான்கு பிரிவாகப் பிரிக்கப்பட்டு வேலைகளை ஆரம்பித்தனர்.

முதலாவது பகுதியினர் நிலத்தைத் திருத்தி, விவசாயத்துறையை ஆரம்பித்தனர். இரண்டாவது பிரிவினர் பாதையைச் செப்பனிட்டனர். மூன்றாவது பிரிவினர் கட்டடங்களைத் திருத்தியமைத்தனர். நான்காவது பிரிவினர் பாடசாலை வளவைச் சுத்தஞ்செய்தனர்.

## 'இலவச அரசாங்க உதவிகளுக்கு ஈடுசெய்க'
### கல்லூரி அதிபர் பேச்சு

புன்னாலைக்கட்டுவன், வியா.

"இலங்கை அரசாங்கம் இலங்கை மக்களுக்கு இலவசமாகக் கல்வி, மருத்துவம், அரிசி ஆகியவற்றைக் கொடுக்கிறது. இதனால் அரசு பல கோடி ரூபாய்களை ஆண்டுதோறும் இழந்து வருகிறது. இதற்கு ஈடுசெய்வதற்காக நாம் பிரதிபலன் கருதாது கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்களில் எமது சேவையை இலவசமாக அரசாங்கத்துக்கு அர்ப்பணிக்க வேண்டும்" என்று உரும்பராய் இந்துக்கல்லூரி அதிபர் திரு. அ. வைத்தியலிங்கம் கல்லூரிமாணவ, மாணவியரின் 'வேலை அனுபவ' இயக்கத்தை ஆரம்பித்துவைத்துக் கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"இவ்வேலை அனுபவ இயக்கத்தின்மூலம் மாணவர் ஒவ்வொரு தொழிலிலும் ஓரளவு அனுபவம் பெறுவதுடன் சமுதாயத்துடனும் கலந்து சமுதாயத்தின் குறைபாடுகளையும் உணரக் கூடியதாயிருக்கும். மேலும் இன்று அமுல் நடத்தப்பட்டு வரும் கல்வித் திட்டத்தின்படி பல்கலைக்கழகம் போன்ற ஸ்தாபனங்களுட்புகவிருக்கும் மாணவருக்கும் தொழிற்பயிற்சி சான்றிதழ் அவசியமாகும் காலம் வந்துவிட்டது. இவ்வாறே உணவு விவசாயம் கல்வித் திட்டங்கள் ஒருமித்து மேற்கொண்டிருக்கும் உணவுப் போஷாக்கு இயக்கத்திலும் மாணவர் ஈடுபடுவதன் மூலம் எமது அடிப்படைப் பிரச்னையான உணவுப் பிரச்னையையும் தீர்த்துக் கொள்ளலாம்."

உரும்பராய் இந்துக்கல்லூரிமாணவர் இன்று பல பிரிவுகளாகப்பிரிந்து ஆசிரியரின் தலைமையில் ஊரெழு, உரும்பராய்தெற்கு உரும்பராய் வடக்கு, கிழக்கு ஆகியபகுதிகளில் வேலை அனுபவ இயக்கத்திலீடுபட்டிருந்தனர். ஊரெழு கிராமமுன்னேற்றச்சங்கம் உரும்பராய் வடக்கு, கிழக்கு கிராம முன்னேற்றச்சங்கங்கள் இம்மாணவருக்குப் பல வேலை அனுபவங்களை அளித்தன.

## புதிய நிர்வாகிகள்

மல்லாவி, வியாழன்

மல்லாவி ஸ்ரீபாலசுப்பிரமணியர் கிராமமுன்னேற்றச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்கத்தலைவர் திரு. வேலுப்பிள்ளை ஜே பி தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் வி வேலுப்பிள்ளை காரியதரிசி வி கணபதிப்பிள்ளை, தனாதிகாரி நா. ஆறுமுகப்பிள்ளை. ஒன்பது பேர் கொண்ட நிர்வாகசபையும்...

## பொலிஸார் தலையீடு பற்றி விசாரணை

யாழ்ப்பாணம், வெள்ளி

வட இலங்கை கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கம், மரவரி முறையில் பொலிஸாரின் தலையீடுபற்றி உள்நாட்டமைச்சர் மூலமாக பிரதம மந்திரிக்கும், ஐ. ஜி. பி.க்கும் சமர்ப்பித்த மகஜர் சம்பந்தமான விசாரணை நேற்று முன்தினம் வடபகுதிப் பொலிஸ் சுப்பிரிண்டன் காரியாலயத்தில் நடைபெற்றது.

வட இலங்கை கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கத்தின் பொதுக்காரியதரிசி திரு. எம். சி. சுப்பிரமணியமும், தொழிலாளர்களும் விசாரிக்கப் பட்டனர்.

விசாரணையின் பொழுது காரியதரிசி திரு. எம். சுப்பிரமணியம், பொலிஸார் அத்துமீறி தொழிலாளர்களைத் துன்புறுத்தி, அவர்களைக் கஷ்டநஷ்டங்களுக்கு உள்ளாக்கியதாகவும், அச்சம்பவங்களை அத்தாட்சிகளுடனும் எடுத்துக்காட்டினார். விசாரணைமுடிவில் சங்கத்தின் கீழ்வரும் கோரிக்கைகளை வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன் சிறீசுடன் ஐ. ஜி. பி.க்கு அனுப்புவதென முடிவுசெய்யப்பட்டது.

பொலிஸார் கலால் இலாகாவின் மரவரிச் சட்டங்களுக்கு அமையவே பரிசோதனைகளை நடத்தவேண்டும்,

மரவரி முறையில் பொலிஸார் பரிசோதனைசெய்யப் போகும்பொழுது, கலால் இலாகா உத்தியோகத்தர்களுடன்தான் போகவேண்டும். (ந நி)

## உடுவில், சுன்னாகம் புறக்கணிப்பா?
### ராஜாங்கமந்திரிக்கு எம். பி. கடிதம்

உடுவில், வியா

"சமீபகாலத்தில் சிறுதனிப்பட்ட வர்த்தகர்களுக்கும் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களுக்கும் துணிவகைகள் வழங்கப்பட்டபோது, சுன்னாகம் பட்டினசபை, உடுவில் கிராமசபை ஆகியசபைகளின் எல்லைக்குள் இருக்கும் கூட்டுறவுச்சங்கங்களுக்கும், தனிப்பட்ட வர்த்தகர்களுக்கும் இந்த துணிவகைகள் வழங்கப்படாது புறக்கணித்து பாகுபாடு காட்டப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் இச்செயலால் பொதுமக்கள் மனக்கசப்படைந்துள்ளார்கள்"

உடுவில் எம். பி திரு. வி. தருமலிங்கம், இராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## நீரில் மூழ்கி மரணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மீன்பிடிக்க நடுக்கடலில் சென்ற ஒருவர் தண்ணீரில் மூழ்கி மரணமான சம்பவம் ஒன்று லீடத்தல் தீவில் நடந்துள்ளது.

லீடத்தல்தீவைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை சுப்பிரமணியத்தின் மரணவிசாரணையின் போது தெரியவந்தது. யாழ்ப்பாணம் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் பிரேத பரிசோதனை நடத்த உத்தரவிட்டுள்ளார்.

பொங்கல்
திருநாளை முன்னிட்டு
சேட்டுகளுக்கு விலைகள்
குறைக்கப்பட்டுள்ளன

| | |
|---|---|
| டெரிலின் சேட் | 24-50 |
| ம. வி. | 18-50 |
| நவீன டிப்ளோமட் சேட் ம. வி. | 9-50 |
| புஸசேட் ம. வி. | 9-00 |
| பொப்பியூலர்ஸசேட் ம. வி. | 7-00 |

பொகுமால்ஸ்
(நவீன புடவைமாளிகை)
49, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பொழுது திரையிடப்படுகிறது!

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | ராஜ் (நீர்கொழும்பு) | நவா (கொட்டாஞ்சேனை... கொம்பனித்தெரு) |
| வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) |
| மோடேர்ன் (பதுளை) | லக்ஷ்மி (ரத்னபுரி) | விஜிதா (ஹட்டன்) |

16-ந் திகதி முதல்
பிளாஸா திரையில்

ஆண்டவன் உலகத்தின் முதலாளி. அவனுக்கு நான் ஒரு தொழிலாளி. அன்னை உலகின் மடியின் மேலே அனைவரும் எமது கூட்டாளி.

எம்.ஜி.ஆர். - கே.ஆர். விஜயா,
எம். ஆர், ராதா, அசோகன், நம்பியார்,
நாகேஷ், மனோரமா
நடித்த
தேவர் பிலிம்ஸ்
தொழிலாளி
டைரக்ஷன்: திருமுகம்.
இசை: திரையிசைத் திலகம் கே.வி. மகாதேவன்.

மாதர்களே!

மாதவிடாய் சம்பந்தமான சகல கோளாறுகளுக்கும், 2 முதல் 3 மாதங்கள் வரை மாதவிடாய் தடைப்பட்டாலும்கூட நிவாரணம்பெற உடனே
மென்சோஸ்டிரோன்
மாத்திரையை
உட்கொள்ளுங்கள்
இது ஓர் அசல் இங்கிலிஷ் உற்பத்தி.
எல்லா வியாபாரிகளிடமிருந்தும் கிடைக்கும்.
விலை ரூ. 7-50 தபாற் செலவு ச. 50
வி. பி. பி கவனிக்கப்படும்.
மெட்ரோ ஏஜென்ஸி,
235 1/1, நொரிஸ் ரோட், — கொழும்பு-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவில் மா-ஸே-துங் எதிர்ப்பாளர்களை நசுக்கி

# ஒழித்துவிடுமாறு உத்தரவு

## "ஆயுதப்புரட்சி" குறித்து பீகிங் வானொலி செய்தி

பீகிங், ஜன. 12

மா-ஸே-துங் எதிர்ப்பாளர்களான "பூஷ்வா பிற்போக்கு வாதிகளை" நசுக்கி ஒழித்துவிடுமாறு சீன மக்களையும் இராணுவத்தினரையும் பீகிங் வானொலி கோரியுள்ளது.

சீனத்தலைவர் மா-ஸே-துங் ஐம்பது நாட்களுக்குப் பின்னர் நேற்று பீகிங் திரும்பினார் என்றும் முக்கிய இடங்களில் அவர் காணப்பட்டார் என்றும் 'ராய்ட்டர்' செய்திகள் தெரிவிக்கின்றன.

சீனாவின் பல பகுதிகளில் நிலைமை குழப்பமாக இருப்பதாக வெளியான செய்திகளின் பின்னர், இச் சம்பவங்கள் குறித்து பீகிங் வானொலி முதற் தடவையாக ஊர்ஜிதம் செய்துள்ளது.

### சீன வானொலி கூறியது

சீன கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேறியவர்கள், சீனாவில் ஆயுதப் போராட்டமொன்றை நடத்த தூண்டி வருகின்றனர் என்று பீகிங் வானொலி குற்றம் சுமத்தியுள்ளது.

இப்பிரிவினர் "பூஷ்வா பிற்போக்கு வாதிகள்" என்று குறிப்பிட்ட பீகிங் வானொலி தொழிலாளர்களின் கவனத்தைத் தங்கள் பக்கம் திருப்பி உற்பத்தியையும் போக்குவரத்தையும் சீர்குலைத்து வருகின்றனர். ஷங்காயில் தொழிற்சாலைகளில் வேலைகளை விட்டு பிரிந்து செய்து நிர்வாகத்தைச் சீர்குலைத்துள்ளனர். பொதுப்பணத்தை தங்கள் இஷ்டம் போல செலவு செய்து வருகின்றனர். ஷாங்காயில் நடைபெற்று வரும் சம்பவங்கள் சீன மக்களுக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும். அங்கு மா-ஸே-துங்குக்கு எதிரான பிற்போக்குவாதிகளுக்கும் செங்காவலருக்குமிடையே இறுதிப் போராட்டம் நடைபெற்று வருகிறது. இந்த பிற்போக்கு வாதிகளின் சொப்பனம் ஒடுக்கப்படும். ஆயுதப் புரட்சியில் இறங்குபவர்களையோ அல்லது மா-ஸே-துங்குக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்பவர்களையோ நசுக்க சீன மக்களும் இராணுவத்தினரும் முன்வர வேண்டும். இது அவர்களின் முக்கிய கடமையாகும்" என்று பீகிங் வானொலி தெரிவித்துள்ளது.

## ரயில் சேவைகள் பாதிப்பு

பீகிங்கிலுள்ள ஜப்பானிய நிருபர் அனுப்பிய செய்தியில் சீனாவின் முக்கிய நகரங்களில் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

'தொழிற்சாலைகள் சில மூடப்பட்டு விட்டன. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கின்றனர்" என்றும் இந்த நிருபர் தெரிவிக்கிறார்.

### மாஸ்கோவில்

மாஸ்கோ நகர மத்தியில் முதற் தடவையாக ஒரு பெரிய சுவரொட்டி காணப்படுகிறது. உத்தியோக பூர்வமான சுவரொட்டி என்று கூறப்படும் இதில், சீனக் கலாச்சாரப் புரட்சி கண்டிக்கப்பட்டுள்ளது.

### சீன செய்தி

சீனாவில் புதிய எதிர்ப்பு நடவடிக்கைகளை நசுக்குமாறு சீன அரசாங்கம் வெளியிட்ட செய்தியில் கட்சியின் தலைமைப் பீடம் உள்ளிட்டு செங்காவலரின் முக்கிய உறுப்பினர்களும் கையெழுத்திட்டுள்ளனர்.

## இஸ்ரேல்-ஸிரிய எல்லையில் மீண்டும் தாக்குதல்

டமாஸ்கஸ், ஜன. 12

ஸிரிய-இஸ்ரேல் எல்லையில் மீண்டும் தாக்குதல்கள் நடைபெற்றதாக ஐக்கியநாடுகள் சபைக்கு ஸிரியா புகார் செய்துள்ளது.

தாக்குதல்கள் நடைபெற்றபொழுது இஸ்ரேல் டாங்கிகளை ஸிரியா படைகள் அழித்துவிட்டன என்றும் இஸ்ரேல் விமானங்கள் துரத்தப்பட்டன என்றும் ஸிரியா அதிகாரியொருவர் இங்கு தெரிவித்தார்.

இஸ்ரேல் துருப்புகள் தாக்குதல்கள் நடத்திய பின்னரே பெரிய துருப்புகள் திருப்பித் தாக்கின என்று இந்த அதிகாரி கூறினார். இதற்கிடையே இஸ்ரேல், நேற்று நடைபெற்ற தாக்குதலில் 2 ஸிரியா துருப்புகள் காயமடைந்ததாக தெரிவித்துள்ளது.

## இந்திய பெட்ரோல் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி

புதுடில்லி, ஜன. 12

முதற்தடவையாக இந்தியா வெளிநாடு ஒன்றுக்கு பெட்ரோல் ஏற்றுமதி செய்துள்ளது.

இந்திய எண்ணெய்க் கார்ப்பரேஷன் முதற்தடவையாக தாய்லாந்துக்கு 5,000 மெட்ரிக் தொன் பெட்ரோல் ஏற்றுமதி செய்துள்ளது.

இந்த வருடத்தில் 50,00,000 மெட்ரிக் தொன் பெட்ரோல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுமென்று இந்திய எண்ணெய் கார்ப்பரேஷன் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு

## செய்திச் சுருக்கம்

மாஸ்கோ, ஜன. 12

மாஸ்கோ போக்குவரத்து எஞ்ஜினியர் இல்ய கூடுப் பேராசிரியர் வி. ஸமிலோவ், பரிசோதனை செய்யும் இயந்திரம் ஒன்றை உருவாக்கியுள்ளார். மாணவர்கள் ஆய்வு வேலைகளுக்குத் தயாராக இருக்கிறார்களா என்பதைப் பரிசோதிக்கவும், இவர்களின் வேலைகளைப் பரிசீலிக்கவும், கேள்விகள் கேட்கவும் இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தலாம். இந்த 'பரிசோதிக்கும் ஆசான்' மாணவர்கள் அளிக்கும் பதில்கள் சரியானவையா என்பதை நிர்ணயிப்பதுடன், அவர்களிடம் கேட்கப்படும் கேள்விகள் அவர்களின் தரத்திற்குத் தகுந்தவையா என்பதையும் அவதானிக்கின்றன.

ஃ ஃ

சங்கீதக் கருவிகளையும் உடைகளையும் நெருப்பு சுட்டுப் பொசுக்கியது. என்றாலும் கலைஞர்கள் தமது கலை நிகழ்ச்சிகளை அளித்தார்கள். இந்தச் சம்பவம் கனடாவில் நடைபெற்றது.

கனடாவுக்கு விஜயஞ் செய்துள்ள யுக்ரேன் கலைக் கோஷ்டியினர் கலைச்சாதனங்கள் தீக்கிரையாயின. ஆனால் கலைஞர்கள் மலைத்து விடவில்லை. உடனேயே அத்தகைய சங்கீதக் கருவிகள் உருவாக்கப்பட்டன. கனடா சங்கீத விற்பன்னர்கள் இசையைத் திருப்பி எழுதினார்கள். சில சாதனங்கள் சோவியத் யூனியனிலிருந்து விமானமூலம் விரைந்தன.

யுக்ரேன் நடனக் கலைஞர்கள் கலைநிகழ்ச்சிகளை அளித்தனர். கனடாவில் இவர்கள் 80 காட்சிகளை நடத்தினர். சிலவற்றை 10 ஆயிரத்துக்கு மதிகமானவர்கள் குழுமியிருந்து ரசித்தனர். பத்திரிகைகள் பாராட்டுகளை தெரிவித்தன.

ஃ ஃ ஃ

சாந்தமண்டல பூகோளப் படம் ஒன்றை லெனின்கிராட் விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர்.

பிரதேச சாந்தமண்டலங்களை ஆராய இது பேருதவியாக இருக்கும் என்று நிபுணர்கள் கருதுகிறார்கள். எமது கிரகத்தின் உள்அமைப்பை ஆராயவும் இது உதவும்.

பசுவதைத்தடை சட்டம்

# அவசரச்சட்டம் பிறப்பிக்க முடியாது

## மத்திய அரசாங்கத்தின் நிலை பற்றி அதிகாரி விளக்கம்

புதுடில்லி, ஜன. 12

பசுவதையைத் தடை செய்வதற்கு அவசரச் சட்டமொன்றையும் மத்திய அரசாங்கம் பிறப்பிக்க முடியாதென்று யூனியன் உள்நாட்டிலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பசுவதையைத் தடைசெய்யும் விஷயம் ராஜ்யங்களின் பட்டியலில் இடம்பெறுகிறபடியால் அது குறித்து மத்திய அரசாங்கம் உடனடியாக எதுவும் செய்ய முடியாது என்றும் அவர் விளக்கினார்.

'சட்டவிஷயத்தில் மாநிலங்களின் முக்கியத்துவத்தை அரசியல் சட்டம் வலியுறுத்தியுள்ளது. இந்தச் சட்டவிஷயத்தை மாற்றம் செய்வதற்கு இந்திய அரசாங்கம் இடைவிடாமல் முயன்று வருகிறது. யூனியன் பிரதேசங்களில் பசுவதைக்குத் தடை விதிப்பது என்ற கொள்கையை மத்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது. இது மட்டுமின்றி சர்க்கார் சேவை நடவடிக்கைகளும் மேற்கொண்டுள்ளது. இதற்கிணங்கப் பசுவதைக்குத் தடைவிதிக்கப் பெரும்பாலான ராஜ்யங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது' என்று அந்த அதிகாரி விளக்கினார்.

ராஜ்ய பட்டியலிலுள்ள விஷயங்களுக்குச் சட்டமியற்ற ராஜ்ய அரசாங்கங்களுக்குத்தான் அதிகாரமுண்டென்றும் அவர் கூறினார்.

# டாக்டர்களின் கோரிக்கையையும் பூரி சுவாமிகள் நிராகரித்தார்

பூரி, ஜன. 12

உண்ணாவிரதத்தை உடனடியாகக் கைவிடுமாறு பூரி சங்கராச்சாரியாரை அவரது டாக்டர்கள் கேட்டுள்ளனர். ஆனால் இதற்கு இணங்க பூரிசுவாமிகள் மறுத்துவிட்டார்.

உண்ணாவிரதத்தை நீடித்தால் அவரது நிலைமை எந்த சமயத்திலும் கவலைக்கிடமாகலாம் என்று சங்கராச்சாரியாரைக் கவனித்து வரும் டாக்டர்களின் அறிக்கையொன்று தெரிவிக்கிறது.

பூரிசுவாமிகள் இன்று 55-வது நாளாக உண்ணாவிரதமிருந்து வருகிறார். அவரது நிறையில் 33.6 ராத்தல் குறைந்துள்ளது. நாடித் துடிப்பு அதிகரித்துள்ளது. மிகவும் பலவீனமாகவிருக்கிறார். மனோநிலைமை தெளிவாகவுள்ளது' என்று டாக்டர்களின் அறிக்கை தெரிவிக்கிறது.

### கோரிக்கை

உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு பூரிசுவாமிகளையும் பிரபுத்த பிரம்மசாரியையும் துவாரகா சங்கராச்சாரியார் கோரியுள்ளார்.

'உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு பல தலைவர்களும் பிரமுகர்களும் கேட்டுள்ளனர். இதற்கு உண்ணாவிரதமிருப்பவர்கள் செவிசாய்க்க வேண்டும். உண்ணாவிரதத்தை நீடித்திருப்பது நாட்டுக்குப் பெரும் தீமையாக முடியும்' என்று துவாரகா சங்கராச்சாரியார் தெரிவித்துள்ளார்.

### கிராமசேவகருக்குச் சன்மானம்

ஊர்காவற்றுறை, வியா.

சட்டவிரோதமாகக் குடியேற முற்பட்டவர்களைப் பிடித்துக்கொடுத்த ஊர்காவற்றுறைக் கிராமசேவகர் திரு. அருளையா அரசாங்கத்திடமிருந்து 300 ரூபா சன்மானம் பெற்றுள்ளார். காரைநகர் வடக்குக் கிராமசேவகர் திரு. வி. சிவப்பிரகாசம், காரைநகர் மேற்கு கிராமசேவகர் திரு. கனகலிங்கம் ஆகிய இருவருக்கும் சன்மானம் கிடைத்துள்ளது.

### எல்லாம் கூப்பன்மயம்

மண்டைதீவு, வெள்ளி.

தட்டுப்பாடு நிலவிவரும் உணவுப்பொருட்களான மாவு, மல்லி, மிளகாய் எல்லாம் இப்போது கூப்பனுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. கூப்பன் ஒன்றுக்கு கால் அவுன்ஸ் மல்லியும், அரை அவுன்ஸ் மிளகாயும் இப்பகுதியில் விநியோகம் செய்யப்படுகின்றன.

### 4 கூப்பனுக்கு கால் அவுன்ஸ்

ஊர்காவற்றுறை, வியா.

தீவுப்பகுதியில் இந்த வாரம் ஒரு கூப்பனுக்கு ஒரு இறாத்தல் மாவு விநியோகம் செய்யப்படுகிறது. மல்லி 4 கூப்பன்களுக்கு ஒரு அவுன்ஸ் வழங்கப்படுகிறது.

# அதிபர் சுகர்னோவின் பதவிக்கு மீண்டும் ஆபத்து

ஜாகர்த்தா, ஜன. 12

இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்னோவை விரைவில் பதவியிலிருந்து விலக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

கடந்த வருடம் நடைபெற்ற திடீர் புரட்சிக்கும், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கும் தாம் எந்தவிதத்திலும் பொறுப்பில்லையென்றும் தமக்கு சிறிதளவு சம்பந்தமும் இல்லை என்றும் சுகர்னோ தெரிவித்திருப்பது குறித்து மக்கள் ஆலோசனை சபைத் தலைவர்களும், மாணவர் இயக்கங்களின் தலைவர்களும் கோபமடைந்திருப்பதாக செய்திகள் கூறுகின்றன. அதிபர் சுகர்னோவை பதவியிலிருந்து நீக்கும்வரை மாணவர்களின் ஆர்ப்பாட்டங்கள் ஓயமாட்டாது என்று மாணவர் இயக்கத் தலைவர் எச்சரிக்கை செய்துள்ளார்.

நாட்டில் உருவாகும் மற்றுமொரு மாணவர் நெருக்கடியைச் சமாளிப்பதற்காக மக்கள் ஆலோசனை காங்கிரஸ் சில நடவடிக்கைகளை அண்மையில் மேற்கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

தைப்பொங்கல்பண்டிகையைமுன்னிட்டு(14-1-1967) சனிக்கிழமை 'ஈழநாடு' காரியாலயத்துக்கு விடுமுறை யாதலால் (15-1-1967) ஞாயிற்றுக்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

### மணிவாக்கு

தன்னுடைய குற்றங்களைப் பிறருக்கெதிரே தைரியமாக ஒப்புக்கொண்டு, அம்மாதிரிக் குற்றங்களை மறுபடியும் செய்வதில்லை என்று உறுதி செய்வதைக்காட்டிலும் அந்தக் குற்றங்களைப் போக்கிக்கொள்வதற்கு வேறு சிறந்த வழியே கிடையாது. —மகாத்மா காந்தி


# ஈழநாடு

EELANADU National Tamil Daily, Post Pox 49 JAFFNA
Telegram EELANADU, Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு மார்கழி மீ 29 (13-1-67)


## தட்டுப்பாடு ஏன்?

'பொங்கலுக்குச் சர்க்கரை கிடைத்ததா?' என்பதுதான் இப்பொழுது யாழ்ப்பாணப் பகுதியில் மட்டுமல்ல இலங்கையில் தமிழ் மக்கள் வாழுமிடங்களில் கேட்கப்படும் கேள்வியாக இருக்கிறது. பலர் வாயிலிருந்தும் எழும் இக்கேள்வி பலர் காதிலும் விழுகிறது. 'சர்க்கரை கிடைத்தது, கிடைக்கிறது'' என்ற பதில் சிலர் வாயிலிருந்துதான் வெளிவருகிறது. சிலருக்குக் கிடைக்கும் சர்க்கரை பலருக்குக் கிடைக்காமலிருப்பதேன்?

பொங்கல் ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பேதமின்றி தமிழ் மக்கள் அனைவரும் கொண்டாடும் திருநாள், பெருநாள். பொங்கலுக்குச் சர்க்கரை இன்றியமையாத பொருள். தமிழ்மக்கள் பொங்கல்பண்டிகையைக் கொண்டாடுவதற்கு அவர்களுக்குச் சர்க்கரை கிடைக்க அரசாங்கம் 'ஏதோ' ஏற்பாடு செய்துள்ளது. முன்போல்சர்க்கரை தாராளமாகக் கிடைக்கமுடியவில்லை. ஆனாலும் இருக்கும் சர்க்கரையைச் சரியாகப் பங்கிட்டுக்கொடுக்கக்கூடிய முறையில் விநியோகம் செய்தால், சர்க்கரை இருக்கிறதென்பாரும் இல்லையென்பாரும் 'இல்லாமல்' எல்லோரும் 'ஏதோ கொஞ்சம் சர்க்கரை கிடைத்தது' என்று வாய் 'திருப்தி'யுடன் சொல்லக்கூடியதாக இருக்கும்.

கூப்பன் கடைகளில் அதாவது பங்கீட்டுச் சில்லறைக் கடைகளிலும், உத்தரவு பெற்ற வர்த்தகர்களின் கடைகளிலும் கூப்பனுக்கு (பங்கீட்டுப் புத்தகம்) ஓர் அவுன்ஸ் சர்க்கரை வழங்கப்படுகிறது. இப்படி ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது (ஒரு கூப்பன் உள்ள ஒருவர் சர்க்கரை வாங்காது விட்டால் மற்றொரு குடும்பத்திற்கு அந்தச் சர்க்கரையையும் கடைக்காரர் சேர்த்துக் கொடுத்தால் சர்க்கரை பெற்றவர் அதிர்ஷ்டசாலிதான்.) சர்க்கரை மட்டுமல்ல. மல்லி, மாவு, மிளகாய், புளி போன்ற மற்றும் தட்டுப்பாடாகவுள்ள பல உப உணவுப் பொருள்களும் 'உள்ளதைப் பகிர்ந்துகொள்ளும்' நோக்குடன் கூப்பனுக்கு அவுன்ஸ் கணக்கில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாம், உணவுக் கட்டுப்பாட்டு இலாகா அதிகாரிகள் இப்படிச் சொல்கிறார்கள்.

ஆனால் கூப்பன்கடைகள் அனைத்திலும் இப்பொருள்கள் யாவும் கிடைக்கவில்லை. சில கடைகளில் சில சமயங்களில் இப்பொருள்கள்தான் கிடைக்கின்றன.

யாழ்ப்பாணமாவட்டத்திலுள்ள சில கிராமங்களில் உப உணவுப்பொருட்கள் கிடைப்பதே பெரும்பாடாக இருக்கிறது. வட்டுக்கோட்டைப் பகுதியில் இந்தவாரம் கூப்பனுக்கு முக்கால் அவுன்ஸ் மல்லி, அரை அவுன்ஸ் மிளகாய், ஓர் அவுன்ஸ் சர்க்கரை, ஒருறாத்தல் மாவு ஆகியவை வழங்கப்பட்டிருக்கின்றன. இதே உணவுப் பொருள்கள் யாழ்ப்பாண நகரத்திலுள்ள சில கூப்பன் கடைகளிலும் சங்கக்கடைகளிலும் கிடைக்கவில்லை. ஆனால் யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டுறவுமொத்த விற்பனவு விதரணக்கடையில் ஆளுக்கு இரண்டு றாத்தல் சர்க்கரை, கால்றாத்தல் புளி, கால் றாத்தல் மிளகாய் ஆகியவையும் சிலருக்கு மல்லியும் கிடைத்திருக்கின்றன. கிடைக்க முடியாத அரிய பொருள்களாகிவிட்ட இவை, கூ.மொ.வி. விதரணக் கடையில் கிடைப்பது மாயமல்ல; பெரிய குற்றமுமல்ல. ஆனால் கூ.மொ.வி. விற்பனைக் கடைகளில்லாத கிராமப்புற மக்களுக்கு இல்லாதவாய்ப்பு நகரப் புறத்திலுள்ள சிலருக்குக் கிடைத்திருக்கிறது. கூப்பன் எதுவும் இன்றி எவருக்கும் கூ. மொ. வி. கடையில் இப்பொருட்கள் கிடைக்குமாதலால் பணவசதியுள்ளவர்கள் பலதடவைகள் 'கியூ'வில் நின்றும் கூலிக்கு ஆள் வைத்தும் வேண்டியஅளவு பெற்றுக்கொள்ளமுடியும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளை லாபமடிக்கக்கூடிய வியாபாரிகளும் இப்பொருள்களை வாங்கி அதிக விலைவைத்து விற்கும் வாய்ப்பு உண்டு.

பங்கீட்டுமுறையில் இப்பொருட்கள் வழங்கும் திட்டத்தைச்சரிவரச் செய்தால், அதாவது தட்டுப்பாட்டுப் பொருள்களைச் சரியான முறையில் விநியோகம் செய்தால், மக்கள் மத்தியில் அதிருப்திக்கும் கொள்ளை லாபத்துக்கும் இடமேற்படாது.

'பதுக்கல் வேட்டை' வேண்டியதுதான். ஆனால் பதுக்கலுக்கு இடமேற்படாமல் செய்வதுதான் விவேகம். ஒவ்வொருசங்கக்கடைக்கும் கூப்பன் கடைக்கும், வாராவாரம் எவ்வளவு பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றனவென்பதைபொதுமக்களுக்குத் தெரியப்படுத்தினால் பதுக்கல், கொள்ளை லாபம் போன்ற ஊழல்களுக்கு இடமிருக்காது.

## நாட்டிலும் நகரிலும்

# எமில் சவுந்தரா

'விநாடிக்கு நூறு பவுண் (சுமார் 1,333 ரூபாய்) தருவீர்களா? அப்படியானால் டெலிவிஷனில் நான் பேட்டி கொடுப்பேன்' என்றார் ரோமாபுரி நகரில் தங்கியிருக்கும் நமது எமில் சவுந்தரநாயகம்.

நமது என்று கூறும்போது எமில், ஓர் இலங்கையர் என்பதும் அவர் யாழ்ப்பாணத்திலுள்ள காரைநகரை ஆதி ஆஸ்தானமாகக் கொண்டவர் என்பதும் உங்களுக்குத் தெரியவேண்டும். எமிலின் தகப்பனார் ஓர் அப்புக்காத்தர். எமிலின் சகோதரி ஒரு டாக்டர்.

இத்தகைய ஒரு பெரிய குடும்பத்தில் பிறந்த எமில், தமது இளம் வயதிலேயே இங்கிலாந்துக்குப் புறப்பட்டுவிட்டார். அபாரமான மூளை படைத்த எமில் அப்பொழுதே ஒரு பெரும் டம்பாச்சாரியாராக வாழ்க்கையை ஆரம்பித்துவிட்டார்.

சவுந்தராவின் மனைவி, காலஞ்சென்ற இலங்கை சினிமா 'கப்பித்தான்' சேர் சிற்றம்பலம் கார்டினரின் மூத்த தமக்கையின் புதல்வியாவார். இப்பெண்மணியின் தந்தையே தற்போது கொழும்பு மாநகரத்தில் டக்கேர்ஸ், கார்கில்ஸ், மில்லேர்ஸ் போன்ற பெரிய வியாபார ஸ்தாபனங்களின் அதிபராகிய சிறல் கார்டினரின் தந்தையாராகிய அலோசியஸ் என்பவர்.

எமில் சவுந்தரா ஒரு தடவை எங்கோயிருந்து பாளம்பாளமாக ஏராளமாகத் தங்கத்தை இலங்கைக்கு கொண்டுவந்தார். விமான நிலையத்தில் சுங்கவரிப் பகுதியினர் இதைக் கண்டு பிடித்துவிட்டார்கள். அப்பொழுது பிரதமமந்திரி, சேர் ஜோன் கொத்தலாவல, கவர்னர் ஜெனரல், சேர் ஒலிவர் குணதிலகா. எமில் விமானநிலையத்திலிருந்தவாறே ஒரு டெலிபோன் 'கோல்' போட்டார். விஷயம் எல்லாம் 'சப்பிம்' மாய் போய்விட்டது.

எமில் சவுந்தராவை ஒரு சாணக்கியன் என்றும் கூறலாம். அப்பேர்ப்பட்ட கூரிய மூளையும், புத்திசாதுரியமும் அவருக்குண்டு.

பெட்ரோல் எண்ணெ, அரிசி முதலிய விஷயங்களில் அவர் பல நாடுகளை ஒன்றோடொன்றுடன் பிணைத்து, தமது விஷயங்களைச் சாகஸமாக ஒப்பேற்றிக்கொண்டு பெரிய பெரிய அரசாங்கங்களை எல்லாம் மண் கவ்வவைத்துவிட்டார்.

இங்கிலாந்தில் எமில் ஒரு பெரிய இன்ஷூரன்ஸ் கொம்பனியை ஸ்தாபித்தார். அக்கினியால் வரும் நஷ்டம், மோட்டார் விபத்துக்களினால் வரும் நஷ்டம், கப்பல் போக்குவரத்துகளினால் ஏற்படும் நஷ்டம்—இப்படியான நஷ்டம் எல்லாவற்றிற்கும் எமிலின் கொம்பனி உத்தரவாதமளித்தது.

திடீரென்று இந்தக் கொம்பனி 'எடோம் கட்டளை' கொடுத்து 'வங்குரோத்'டாகிவிட்டது. எமிலுக்கும் பொல்லாத கையினம் ஏற்பட்டது. பிரிட்டன் பிரஜையாயிருந்த எமில் இலங்கையில் வந்து சிறிதுகாலம் உடம்பைச் சொஸ்தம் பண்ணிக்கொண்டார்.

பிரிட்டனின் வர்த்தக சபை இந்த விவகாரம் சம்பந்தமாக எமிலை லண்டனுக்கு வரும்படி அழைத்தது. தன்பிரகாரம் அவர் லண்டனுக்குப் போகும்வழியில் ரோமாபுரி நகரில் தங்கியிருக்கும்போது தான் டெலிவிஷன் காரர் அவரைப் பேட்டிதருமாறு அழைத்தார்கள்.

43 வயதான சவுந்தரநாயகம் லண்டன் மாநகரத்தில் உள்ள தமது மாடமாளிகை ஒன்றை விற்கப்போகிறாராம். அதன் உத்தேசவிலை என்ன தெரியுமா? சுமார் ஒரு லட்சம் பவுண். அதாவது கிட்டத்தட்ட 13 லட்சம் 80,000 ரூபாயாகும்.

எமில் சவுந்தராவைப் பற்றி இலங்கையராகிய நாம் பெருமைப்படவும் கூடும். ஆனால் அதேசமயம் இப்பேர்ப்பட்ட தீட்சண்ய புத்தி வாய்ந்தவர் தமது மதியூகத்தைப் பிழையான வழிகளில் செலுத்திவிட்டாரே என்று கவலைப்படவும் வேண்டியவராகிறோம்.

—வழிப்போக்கன்

## இலங்கைக்கு 'டெலிவிஷன்'

கொழும்பு, வியா.

இன்னும் 16 மாதங்களில் குறைந்தது 500 டெலிவிஷன் கருவிகளாவது இலங்கையில் இயங்குமென இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இக்கருவிகளைத் திட்டத்தை ஆரம்பிக்கும் மேற்கு ஜெர்மன் அரசாங்கமே அன்பளிப்புச்செய்யும். இக்கருவிகள் சனசமூக நிலையங்கள், பள்ளிக்கூடங்கள் போன்ற பொது இடங்களுக்கே முதலில் கொடுக்கப்படும். தனிப்பட்டவர்கள் 'டெலிவிஷன்' கருவி வாங்குவதற்கு உள்ளூர் வர்த்தக ஸ்தாபன மொன்றின் ஒத்துழைப்புடன் ஜெர்மன் வர்த்தகக் கம்பெனி ஒன்று கருவிகளை இங்கு அமைப்பதற்கான வேலைகளை ஆரம்பிக்கும் வரை பொறுத்திருக்க வேண்டும். தனிப்பட்டவர் ஒருவருக்கு டெலிவிஷன் கருவி ஒன்று ரூபா 800 செலவாகும்.

## பளைப்பகுதியில் குடியேற்றத்திட்டம்

பளை, புதன்.

பளைப்பகுதியிலுள்ள ஊரிவனிகன் பற்று என்னும் இடத்தில் படித்த வாலிபர்களுக்கான குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் பச்சிலைப்பள்ளி காரியாதிகாரியின் பிரிவில் உள்ள பளைப்பகுதி படித்த வாலிபருக்கு காணிகள் வழங்கப்படும்.

இதற்கான விண்ணப்பங்கள் பெப்ரவரி மாதத்தில் கோரப்படுமெனத் தெரியவருகிறது.

இங்குநடைபெற்ற நெசவுநிலைய திறப்புவிழாவின்போது யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா மேற்கண்ட விஷயத்தைத்தெரிவித்தார்.

## பத்திரங்கள் சிங்களமொழியில்

உடுப்பிட்டி, வியாழன்.

பருத்தித்துறையிலுள்ள வடமராட்சிப் பதிவு காரியஸ்தர் கந்தோரில் வழங்கப்படும் பிறப்பு, இறப்பு தேடுதல் விண்ணப்பப் பத்திரங்கள் யாவும் தனிச் சிங்கள மொழியிலேயே உள்ளனவாம். இதனால் சிங்கள மொழி புரியாத தமிழ்மக்களுக்கு வசதி செய்யும் முகமாகத் தற்பொழுது பதிவுக் கந்தோரில் கைவசமுள்ள இரண்டொரு தமிழ் விண்ணப்பப் பத்திரங்களின் உதவியுடன் சிங்களமொழியில் உள்ள விண்ணப்பப் பத்திரங்கள் தமிழ் அல்லது ஆங்கில மொழியில் நிரப்புகிறார்களாம்.

## உடுவில் பஸ்சேவை

உடுவில், வியாழன்.

சுன்னாகம்-கந்தரோடை கம்பிரமவிலம் வீதி இப்பொழுது துரிதவேகத்தில் திருத்தியமைக்கப்பட்டு வருகிறது. விரைவில் இவ் வீதிவழியாக இரட்டைத்தட்டு பஸ்களின் சேவை நடைபெறவிருக்கிறது.

மட்டக்களப்பு

# நகரசபைத் தலைவருக்கு அமைச்சர் பாராட்டு

கல்முனை, வியாழன்.

"கிழக்கு மாகாணத்திலே மட்டக்களப்பு மிகவும் பிரதானமான நகரமாகும். மட்டக்களப்பின் முன்னேற்றத்திலேதான் நான் மிகவும் அக்கறை கொண்டுள்ளேன். மட்டக்களப்பு பல வழிகளிலும் முன்னேறவேண்டும் என்ற காரணத்தினால்தான், நான் நகரசபையை மாநகர சபை என்ற ஸ்தானத்திற்கு உயர்த்தியுள்ளேன். மேலும் இந்த நகரசபைக்கு நல்லதோர் சந்தை இல்லாத பெருங்குறையை இன்று நிவர்த்தி செய்துள்ளோம். இதில் பெரிதும் முன்னின்று உழைத்தவர் உங்கள் நகரசபைத்தலைவர் திரு. ஜே. எல். திசவீரசிங்கம் அவர்களாவர்",

மட்டக்களப்பில் புதிதாக அமைக்கப்பட்ட நவீன சந்தையை திறந்து வைத்துப் பேசுகையில் உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்பேசுகையில் கூறியதாவது:

"சுமார் ஏழு லட்சம்ரூபா செலவிலான இந்த நவீனசந்தையின் இருபிரிவுகளுந் தற்சமயம் முடிவடைந்துவிட்டது. ஏனைய இரு பிரிவுகளும் முடிவடைந்ததும் மக்களின் பாவனைக்கு இது மிகவும் பயன்படும்".

நகரசபைத் தலைவர் திரு. ஜே. எல். திசவீரசிங்கம் நன்றிகூறினார்.

# 'எல்லையைவிஸ்தரிக்கவேண்டும்'

## மயிலிட்டி கிராமசபை தீர்மானம்

குரும்பசிட்டி, வியாழன்.

மயிலிட்டிக் கிராமசபையின் தற்போதைய 11-ம் 12-ம், 13-ம் வட்டாரங்கள் இட விஸ்தீரணம் சனத்தொகை அதிகரிப்பு போன்ற காரணங்களுக்காக ஆறு வட்டாரங்களாகக் கூட்டி எல்லை விஸ்தரிப்பு நிர்ணயம்செய்து வைக்கவேண்டும் என உள்ளூராட்சி மந்திரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் மயிலிட்டிக் [illegible] மயிலிட்டிக் கிராமசபைத் தலைவர் திரு. சி. அருணாசலம் தலைமையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் மத்திய அரசாங்கம் வழங்கும் 1,01,130 ரூபா மானியத்தை பாவி மயிலிட்டிக் கிராமங்களின் மின்சார விஸ்தரிப்புக்கு செலவிடப்படுவது என்றும் கிராமமின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வழங்கப்படவிருக்கும் நன்கொடையை பிலம்பகுதிமின்சாரவிநியோ[illegible] பாவிப்பது என்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலப் படிவங்களை தமிழில் இலவசமாக மொழிபெயர்க்க முன்வந்த எம்.பி.

## தபாலதிபருக்கு அறிவித்துள்ளார்

யாழ்ப்பாணம், வெள்ளி. தபால் பகுதியினரால் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் வெளியிடப்படும் படிவங்களை இலவசமாகத் தமிழில் மொழிபெயர்த்துக்கொடுக்க கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் முன்வந்துள்ளார்.

போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் திரு. பெரேராவுக்கு அவர் எழுதியுள்ள கடிதமொன்றில் மேற்கண்டவாறு குறிப்பிட்டு, குறுகிய காலத்தில் மொழிபெயர்த்துக் கொடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

தபால் பகுதியினரால் வெளியிடப்படும் படிவங்கள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே வெளியிடப்பட்டுவருகிறது. இதனால் தமிழ்மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

தமிழ்மொழிச் சட்டத்தின்படி அப்படிவங்களைத் தமிழிலும் வெளியிடலாம். உங்களுக்கு விருப்பமானால் எனக்கு அனுப்பிவைத்தால் இலவசமாகத் தமிழில் மொழிபெயர்த்து அனுப்புகிறேன்.

ஜீவனாம்ச வழக்கு

## நீதிமன்றத்தில் மனைவியை கணவன் குறுக்குவிசாரணை

மாவிட்டபுரம், வெள்ளி. ஏழுபிள்ளைகளுக்கு தந்தையான என் கணவர் எங்களைக் கைவிட்டுவிட்டு வேறுபெண்ணுடன் புதுவாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறார்

ஜீவனாம்ச வழக்கில் வாதி விளானைச்சேர்ந்த சரசு என்பவர் சாட்சியமளிக்கும்போது மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு மல்லாகம் கோர்ட்டில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் வாதி விளானைச் சேர்ந்த சரசு என்பவர் தனது கணவனுகிய வல்லி தம்பியிடம் இருந்து தனக்கும் தனது 7 பிள்ளைகளுக்கும் 165 ரூபா ஜீவனாம்சம் கோரியுள்ளார். வாதி தரப்பில் வழக்கறிஞர் ஆர். ஜி செல்வரத்தினம் ஆஜரானார்.

பிரதிவாதியான கணவன் சார்பில் எவரும் ஆஜராகவில்லை. நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் கோரிய மனைவியை கணவன் குறுக்கு விசாரணை செய்தார்.

சரசு சாட்சியமளிக்கையில் கூறியதாவது: 18 வருடங்களுக்குமுன் எங்களுக்கு திருமணம் நடந்தது. எங்களுக்கு 7 குழந்தைகள் உண்டு. எங்கள் வாழ்க்கை இன்பமாகவே நடைபெற்று வந்தது. எட்டுமாதத்தின் முன் எங்கள் வாழ்க்கையில் ஒரு பெண் குறுக்கிட்டார். அன்று முதல் வாழ்க்கை சீர்குலைந்தது. அந்தப்பெண்ணும் எனது கணவரும் சிநேகிதமானவைத் தொடர்ந்தது. அந்தப் பெண்ணின் கணவன் வேறு ஒருவரை விவாகம் செய்துவிட்டார். இதனால் அந்தப்பெண் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டார். இதன்பின் நானும் பிள்ளைகளும் வீட்டைவிட்டு வெளியேறினோம். அந்தப் பெண் இப்பொழுது கர்ப்பிணியாக இருக்கிறார்.

கணவன் தம்மை சாட்சியமளிக்கையில், தனக்கும் குறிப்பிட்ட பெண்ணுக்கும் தொடர்பு இடையாதென்றும் அப்பெண் தனது தாயார் வீட்டில் வசிப்பதாகவும் கூறினார்.

விசாரணைமுடிவில் நீதிபதி பிள்ளைகளுக்கு மாதந்தோறும் 85 ரூபா பராமரிப்புப்பணமாகக்கட்டும்படி பிரதிவாதிக்கு உத்தரவிட்டார். வாதிக்கு பராமரிப்புப்பணம் கட்டுவதைப் பற்றி அடுத்த தவணையில் விசாரித்து தீர்ப்பளிப்பதாக கூறினார்.

நல்லூர்

## பெண்கடத்தல்வழக்கு 2 -ல் தொகுப்புரை

யாழ்ப்பாணம் வெள்ளி நல்லூர் பெண் கடத்தல் வழக்கு நேற்று முன்தினம் காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் பதில் நீதிபதி திரு. எஸ். சி. கதிரவேலு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இம்மாதம் 26-ம் திகதிவரை விசாரணையை ஒத்திவைத்தார். அன்று வழக்கறிஞர்கள் தொகுப்புரை நிகழ்த்துவார்கள்.

இவ்வழக்கில் நல்லூரைச் சேர்ந்த மேரி தவபிரகாசம் என்பவரை துரைசிங்கம், திருநாவுக்கரசு, நவரத்தினம், தங்கராசா ஆகியோர் பலாத்காரமாகக் கடத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

எதிரிகள் சார்பில் புறக்டர்களாக எஸ். நவரத்தினம் எஸ். அமிர்தலிங்கம் ஆகியோரும் வழக்காளி தரப்பில் புறக்டர்களான ஏ. அம்ரனி, ஆர். விஸ்வநாதன் ஆகியோரும் ஆஜரானார்கள்.

அராலி

## நலஉரிமைச் சங்கம்

அராலி, வியா. அராலிநலஉரிமைச்சங்கத்தினர் நேற்றையதினம் ஒரு விசேஷகூட்டத்தை நடத்தி எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத்தேர்தல்களுக்குமுன்னதாக அராலிக்கிராமசபை உருவாக்கப்பட வேண்டுமென்றுகோரி அதற்கான வேலைகளை துரிதப்படுத்துவதற்கு சங்கத்தலைவர், இணைக்காரியதரிசிகள் உட்பட 15 பேர்கொண்ட ஒரு குழுவை நியமித்துள்ளனர். இக் குழுவினர் உபகுழுக்களாகப்பிரிந்து வட்டுக்கோட்டை எம். பி. திரு அமிர்தலிங்கத்தையும், ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு திருச்செல்வத்தையும் பேட்டிகண்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## அராலிக்கிராம மின்சார விநியோகம்

அராலி, வியா. அராலிக் கிராமத்திற்கு மின்சார விநியோகம் செய்யும் முதலாவது திட்டத்தில் [illegible] வேலைப் பகுதியார் தெருவோரத்தில் வசிப்பவர்களுக்குமட்டுமே மின்சாரம் வழங்குவதெனத் தீர்மானித்திருந்தனர். இப்போது அராலிமேற்கில் ஓர் ஒழுங்கைக்கும் தெற்கில் ஓர் ஒழுங்கையில் வசிப்பவர்களுக்கும் மின்சாரவிநியோகம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டு முற்பணம் கட்டுமாறும் கோரப்பட்டுள்ளது.

## 'அரிசி மறுகொத்து கூடிய விலையில்'

யாழ்ப்பாணம், வெள்ளி ஒரு கொத்து அரிசியை இலவசமாகப் பெறும் பொதுமக்கள் மறுகொத்து அரிசியை கூடியவிலைகொடுத்தும் வாங்க முடியாத நிலையிலுள்ளார்கள் என்று அம்பலை புதுச்சந்தை மைதானத்தில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் (பீகிங்) கட்சியின் கூட்டத்தில் நீர்வை பொன்னையா பேசும்போது கூறினார்.

திரு. பாலசுப்பிரமணியத்தின் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. திருவாளர்கள் கா. செந்திவேல், எஸ். ராசா, கி. பாலசுப்பிரமணியம் ஆகியோரும் பேசினார்கள்.

## நியமனம்

இமையாணன், வியா. உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் இந்த வருடம் தொடக்கம் மேலதிகமாக ஒரு புதிய விஞ்ஞான ஆசிரியர் நியமிக்கப்பட்டுள்ளார். அனுராதபுரம் விவேகானந்த வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. கதிரவேலு இங்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இமையாணன், வியா. பதுளையில் ரயில்நிலைய உப அதிபராகக் கடமையாற்றிய திரு. கு. சண்முகலிங்கம் கல்முனை ரயில்நிலையத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி. தேசிய அரசாங்கசுகாதார சேவையாளர் சங்கபொதுக் கூட்டம் இம்மாதம் 19-ம் திகதி யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது உடுப்பிட்டி எம். பி திரு.எம். சிவசிதம்பரம் பிரதம பேச்சாளராக கலந்து கொள்வார்.

## சுகாதாரமந்திரி யாழ் வருவார்

குரும்பசிட்டி, வியாழன். சுகாதார அமைச்சர் திரு. எம்.டி. எச் ஜெயவர்த்தன இரண்டாம் தடவையாக யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வமாக விரைவில் விஜயஞ்செய்ய இருக்கிறார். சாவகச்சேரி, வட்டுக்கோட்டை, உடுவில் ஆகிய தொகுதிகளில் மந்திரி விஜயம் செய்து வைத்தியசாலைகளின் நிலைகள் பற்றி அறிந்துகொள்வார். கைதடியில் நிறுவப்படவிருக்கும் ஆயுள்வேத ஆஸ்பத்திரி ஆராய்ச்சி நிலையத்துக்கான அத்திவாரக் கல்லினை நாட்டிவைத்தல் மந்திரியின் முக்கிய நிகழ்ச்சியாக இருக்கும். யாழ்ப்பண்ணையில் நிறுவப்பட்டுள்ள மத்திய மருந்துச் சாலையையும் திரு. ஜெயவர்த்தனா திறந்து வைப்பார்.

## கூப்பன்களை ஒப்படைத்தனர்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணநகரப் பகுதியைச் சேர்ந்த இதுவரை 46 பேர் தங்கள் பங்கீட்டுச்சீட்டு புத்தகத்தை யாழ்ப்பாணக் காரியாதிகாரியிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவைதவிர யாழ்ப்பாணம் பல்வேறு பகுதியிலிருந்தும், அரசாங்க அதிபரிடமும் பலர் தங்கள் பங்கீட்டுச்சீட்டு புத்தகங்களை ஒப்படைத்துள்ளனர்.

கிளிநொச்சிப் பகுதியிலும் விவசாயிகள் தங்கள் பங்கீட்டுச்சீட்டு புத்தகங்களை காரியாதிகாரியிடம் ஒப்படைத்துள்ளனர்.

## சீன புத்தகப்பார்சல்கள் தடுத்து வைக்கப்பட்டன

கொழும்பு, வியா. இலங்கையிலுள்ள பலருக்கு விலாசமிடப்பட்ட 7000 இலக்கிய சஞ்சிகைகள், புத்தகங்கள் கொண்ட பார்சல்களை பிரதம சுங்க அதிகாரி தடுத்து வைத்துள்ளார்.

பீகிங்கிலுள்ள பிரபல வெளியீட்டு நிறுவனம் ஒன்றிலிருந்து இப்புத்தகங்களும் சஞ்சிகைகளும் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆங்கில மொழியிலுள்ள இவைகள் ஆங்கிலம் தெரியாத பல கிராமவாசிகளின் பெயருக்கு அனுப்பப்பட்டுள்ளனவாம்.

இச்சஞ்சிகைகள், புத்தகங்களினுல் அந்நியச் செலாவணி ஏதுவிதத்திலும் சம்பந்தப்படவில்லையெனினும் நாசவேலைகளைத் தூண்டிவிடக்கூடிய இலக்கியங்களும் இதில் அடங்கியுள்ளனவாம்.

## 'அல்லாஹ்வுக்குச்செலுத்தும் நன்றிக்கடன்'

தாம் பெற்ற இன்பத்துக்காகவும் செய்தநற் செயல்களுக்காகவும் நன்றி செலுத்துவதோடு [illegible] மென்று உதவி நீதி மந்திரி திரு. எம். எச். எம். நயினா மரிக்கார் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அன்பு அறம் நற்பண்பு ஆகியவற்றை விருத்திசெய்யும் மனப்பாக்குவத்தை இத்திருநாளிலே முஸ்லிம்கள் பெற வேண்டுமென்று பிரார்த்திப்பதாக அவர் தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

## இனமத ஒற்றுமை ஏற்படவேண்டும்

'நமது குடும்பத்திலும் நமது சமூகத்திலும் நமது நாட்டிலும் சௌஜன்யத்தை ஏற்படுத்தி பல் வரும் மத இனங்களோடும் இணைந்து தனிவாழ்விலும் பொதுவாழ்விலும் சுயநலத்தை ஒதுக்கி சகல மக்களினதும் நன்மைக்காக உழைப்பதற்கு நாம் இந்த 'ஈதுல் பித்ர்' பெருநாளின்போது உறுதி பூணுவதுதான் நாம் உபவாசமிருந்து பிரார்த்தனை புரிந்ததன் உண்மைத் தத்துவமாகும்' என்று அகில இலங்கை சோனகர் சங்க ஆயுட்கால தலைவர் சர் ராஸிக் பரீத் விடுத்துள்ள வாழ்த்துச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

'ஈகைப் பெருநாளாம் ஈதில். நாமனைவரும் ஒன்றுபட்டவர்களாக ஒருமித்த முஸ்லிம்களாக பெருநாளையும் பெருநாள் பிரார்த்தனைகளையும் செலுத்துவோம் என்று அவர் கோரியுள்ளார்.

## வட்டுக்கோட்டையில் சிரமதானவேலை

வட்டுக்கோட்டை, வியா. வட்டுக்கோட்டையில் நேற்றும், இன்றும், வட்டுக்கோட்டை பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்கள் சிரமதான வேலையில் ஈடுபட்டனர். பாடசாலை வளவுகள் மலகூடங்கள், கிணறுகள் கரைகள், நன்கு சுத்தமாக்கப்பட்டன. அராலி தெற்கிலுள்ள ஓர் நெசவு நிலையத்தில் மேல்வகுப்பு மாணவிகள் சுமார் 50-பேர் துணி நெய்தல் வேலையில் ஈடுபட்டனர்.


# பொங்கல் மலர்

★ கவிஞர் பொங்கல்
★ கலைப் பொங்கல்
★ சிறந்த, பயனுள்ள கட்டுரைகள்
★ படங்கள்

ஆகியவைகளுடன் வழமைபோன்று உள்ளூர் வெளியூர்ச் செய்திகளையும் சுடச் சுட தாங்கிய படி

14 - 1 - 1967

சனிக்கிழமை

"ஈழநாடு"

வண்ணமுகப்புடன் பொங்கல் மலராக வெளிவருகிறது

உங்கள் பிரதிகளுக்கு உங்கள் விற்பனையாளர்களிடம் ஏற்பாடு செய்யுங்கள். அதிக பிரதிவேண்டுவோர் விற்பனையாளர் "ஈழநாடு" விநியோகப் பகுதியினருடன் தொடர்புகொள்ளவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தொலைபேசி டைரக்டரியை தமிழிலும் வெளியிடுக"

**— கிளிநொச்சி எம். பி.**

யாழ்ப்பாணம், வெள்ளி தொலைபேசி டைரக்டரியை தமிழிலும் வெளியிட சீக்கிரம் நடவடிக்கை எடுங்கள் என்று போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் திரு. ஏ. எல். பெரேராவுக்கு கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் அனுப்பியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: தாங்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் தொலைபேசி டைரக்டரியை தமிழிலும் வெளியிட நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதியளித்தீர்கள். அத்துடன் எனக்கும் கடிதமூலம் அறிவித்துள்ளீர்கள்.

புதிய தொலைபேசி டைரக்டரியைத் தமிழிலும் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. தமிழிலும் வெளியிடச்செய்வது உங்கள் கடமையாகும்

---

தொடங்கஸ்லாந்தை உபதேர்தல்

# கடைசிநேர பிரச்சாரம் தீவிரமடைகிறது

## திங்கள் அதிகாலை முடிவு

குருணாகலை, வியாழன் தொடங்கஸ்லாந்தை தேர்தலுக்கு இன்னும் இரண்டு நாட்கள் தான் இருக்கின்றன. யு. என். பி. யும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இப்போது தீவிரமான கடைசி நேரத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

கடந்த சில தினங்களாக தொடங்கஸ்லாந்தைத் தொகுதியில், பிரதமர் டட்லி சேனநாயக்காவும், மந்திரிசபை அங்கத்தவர்கள் அனைவரும் வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்து வந்ததுடன், பல பொதுக் கூட்டங்களிலும் கலந்துரையாற்றினார்கள். எதிர்க்கட்சியினரும் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையில் இவ்விதமே கடும் பிரசாரத்தில் இறங்கியுள்ளனர்.

வாக்குப்பதிவு ஞாயிற்றுக்கிழமை 15-ம் திகதி காலை 8 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 மணி வரை நடைபெறும். வாக்குப் பெட்டிகள் குருணாகலை நகர மண்டபத்திற்கு இரவு 8 மணிக்கிடையில் கொண்டு வரப்படும். 9 மணியிலிருந்து வாக்குகள் எண்ணப்படும். அவை திரும்பவும் எண்ணப்படாத சந்தர்ப்பத்தில், முடிவுகள் அதிகாலை 1 மணிக்கிடையில் வெளியாகும்.

---

# 'ஆர்ப்பாட்டத்தினால் பயனில்லை'

யாழ்ப்பாணம், வெள்ளி "நமது கட்சியினர் தீண்டாமை ஒழிப்புச் சம்பந்தமாக அக்கறை அற்றிருப்பதாகச் சிலர் தப்பாக நினைக்கின்றனர். கோஷங்கள் போடுவதாலும் ஆர்ப்பாட்டம் செய்வதாலும் தீண்டாமைப் பிரச்னை தீர்ந்துவிடப்போவதில்லை. நாங்கள் தீண்டாமை என்ற சாதிக்கோட்டை ஒழித்துக்கட்டுவதற்கு அயராது போராடி வந்துள்ளோம். சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணிக்கு எங்களின் ஒத்துழைப்புண்டு. ஆனால் அதற்குள் ஊடுருவி அதைச் சின்னாபின்னப்படுத்த நாம் தயாராகஇல்லை" என்று சுன்னாகத்தில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் (மாஸ்கோ) வாலிபர் சங்கக்கூட்டத்தில் வாலிபர் சங்கத் தலைமைக் குழு உறுப்பினர் திரு சி. விஜயானந்தன் பேசுகையில் கூறினார்.

திரு. எஸ். தருமலிங்கம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. திரு. எஸ். இராசையா உட்பட வேறு பலரும் பேசினர். (த. நி.)

---

# 'தினமும் திருவாசகம் ஓதுக'

கொடிகாமம், வியாழன் "மக்களுக்காக இறைவன் வேண்டுகோள்படி திருவாதவூரரால் உண்டாக்கப்பட்டதே திருவாசகம். வாழ்வு வளம்பெற தினமும் திருவாசகம் ஓதுக" என்று உருத்திரபுரம் மகாதேவ ஆச்சிரமத் தலைவர் திரு. ஸ்ரீமத்வடிவேல் சுவாமிகள் சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோவிலில் நடைபெற்ற திருவாசகத்தேன் விழாவில் தலைமை வகித்து உரையாற்றும்போது கூறினார். உருத்திரபுரம் குருகுலத் தலைவர் எஸ். கனகநாயகம், செல்வி க. சின்னத்துரை ஆசிரியை ஆகியோர் உரையாற்றினர்.


# டைம் கிறீம்

உலகப் பிரசித்தி பெற்றது. இரம்மியமானது. இது. இல்லற வாழ்க்கையில் பூரண திருப்தி அளிப்பது. புகழ்வாய்ந்த மேல்நாட்டு மருத்துவ நிபுணர்களால் உயர்தர ரசாயன மருத்துவசாலையில் தயாரிக்கப்பட்டது. முழு விபரங்களுக்கும் எமக்கு எழுதுங்கள். V. P. P. மூலம் அனுப்பப்படும்.

விலை ரூ. 5/-
தபால் செலவு சதம் -/25

மெட்ரோ ஏஜென்ஸி
235 1/1, நொரிஸ் ரோட்,
கொழும்பு-11


---

கந்தரோடை

# பண்டகசாலை புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி கந்தரோடை ஐக்கிய பண்டகசாலைக் கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட புதிய நிர்வாக சபை வருமாறு:

தலைவர்: எம். நடராசா. உபதலைவர்: கே. கந்தசாமி. காரியதரிசி: சி. விஜயானந்தன். தனாதிகாரி: வி. சோமசுந்தரம். ஐந்துபேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

---

# எ . பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி "தபால் அறிமுக அட்டை கடந்த ஒரு வருடகாலமாக தமிழில் வெளியிட எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை. விரைவில் தமிழில் வெளியிட நடவடிக்கை எடுக்கவேண்டும்."

போஸ்ட்மாஸ்டர் ஜெனரலுக்கு கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்

---

# இந்தியத் தேர்தல் அரங்கு

## அண்ணாதுரையை எதிர்த்து ....!

தி. மு. கழகத்தலைவர் சி. என். அண்ணாதுரையை எதிர்த்து தொழிற்சங்கத் தலைவர் குருமூர்த்தி நிறுத்தப்பட்டுள்ளார்.

## இந்திரா துக்கம்

"காங்கிரஸ்கட்சி, வளர்த்த மரம் போன்றது அதை வெட்டிச் சாய்க்கப்பார்க்கிறார்களே" என்று பிரதமர் இந்திரா காந்தி வருத்தத்துடன் கூறினார். சென்னை விஜயத்தின் போது, ஒரு பொதுக் கூட்டத்தில் மேடையிலேயே அவர் இவ்விதம் கூறினார்.

## லோகியா கண்டனம்!

அரசாங்க விமானத்தைப் பயன்படுத்திப் பிரதமர் இந்திரா காந்தி தேர்தல் பிரசாரம் செய்வதற்கு சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் லோகியா எதிர்ப்புத் தெரிவித்தார்.

அரசாங்க விமானப் போக்குவரத்து நிறுவனத்துக்குச் சொந்தமான தனி விமானத்தில் பறந்து சென்று தமிழ்நாடு, மைசூர் ஆகிய இடங்களில் இந்திரா காந்தி தேர்தல் பிரசாரம் செய்தார்.

## பக்தவத்சலம் உறுதிமொழி!

"தமிழ் நாட்டில் காங்கிரசுக்கு வெற்றிதேடித் தருவோம்" என்று பிரதமர் இந்திரா காந்தியிடம் முதல் மந்திரி பக்தவச்சலம் உறுதி கூறினார்.

## சவான் விருப்பம்!

"பொதுத் தேர்தலுக்குப் பிறகும், இந்திரா காந்தியே பிரதமராக நீடிக்க வேண்டும்" என்று டில்லி அரசாங்கம் உள்நாட்டு மந்திரி சவான் விருப்பம் தெரிவித்துள்ளார்.

## அண்ணா கருத்து?

"தமிழ் நாட்டில் பிரதமர் இந்திரா காந்தி 3 நாட்கள் சுற்றுப்பயணம் செய்தார். ஆனால், அவர் உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை.

ஏதோ அந்தக்காலத்தில் அவருடைய அப்பா நேரு எழுதி வைத்ததை உருப்போட்டு இப்போது பேசி இருக்கிறார். அந்தப்பேச்சு முறை பொருத்தமாக இருந்திருக்கலாம் இன்றைய நிலைக்கு ஏற்றதல்ல" இவ்வாறு திருச்சியில் நடைபெற்ற தி. மு. கழகப்பொதுக் கூட்டத்தில் அண்ணாதுரை பேசுகையில் குறிப்பிட்டார்.

## உழைப்பாளர் கட்சி மாநாடு?

உழைப்பாளர் கட்சி மாநாடு வேலூரில் நடைபெற்றது. உழைப்பாளர் கட்சித் தலைவர் எம். ஏ. ராமசாமி படையாச்சி கலந்து கொண்டு பேசினார். மாநாட்டில் உழைப்பாளர் கட்சி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. மொத்தம் 34 தொகுதிகளுக்கு வேட்பாளர்கள் பெயர்கள் அறிவிக்கப்பட்டன.

## டி. டி. கே. நம்பிக்கை

"சில இடையூறுகள் இருந்தாலும், தேர்தல்களில் காங்கிரஸ் வெற்றி பெறுவதற்கு நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. காங்கிரஸ் வெற்றிக்காகச் சிறந்த அளவுக்குப் பாடுபட்டு வருகிறேன்" என்று டி. டி. கிருஷ்ணமாசாரி கூறியுள்ளார்.

## கிருபளானி

மத்திய பிரதேசத்திலுள்ள ராய்ப்பூரிலிருந்து [illegible] ஆச்சாரிய ஜே. பி. கிருபளானி [illegible] னார். அவர் கட்சி சார்பில் நிச் சுயேச்சையாகவே போட்டியிடுவார் பி. சோ. கட்சி, ஜனசங்கம், சுதந்திராக்கட்சி, புதிதாக அமைக்கப்பட்ட ஜனகாங்கிரஸ் ஆகிய கட்சிகள் அவருக்கு ஆதரவு அளிப்பதாக உறுதி கூறியுள்ளன.

## கேரளாவில் ஜனசங்கம்

கேரளாவில் ஜனசங்கம் தனித்து நின்றே தேர்தலில் போட்டியிடுமெனக் கட்சியின் கேரளக் கிளையின் அமைப்புக் காரியதரிசி பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார். ஜனசங்கம் 14 அசெம்பிளி தொகுதிகளில் போட்டியிடும்.

---

# நூல் வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ் இலக்கிய வட்டத்தின் ஆதரவில் செம்பியன் செல்வனின் 'அமைதியின் இறகுகள்' சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு விழா இம்மாதம் 18-ம் திகதி யாழ் மாநகரசபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் நூலை வெளியிட்டுவைப்பார். (ந. நி.)

---

# இப்படியும் சர்க்கரை

பண்டத்தரிப்பு, வியா. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இங்கு பல கடைகளிலும் சர்க்கரை விநியோகம் செய்யப்படுகிறது. ஆனால் இது புளிபோன்று கருமைநிறமாகவும், தும்பும் கருப்பஞ்சக்கையும் அதிகமாக உள்ளதாகக் காணப்படுகிறது. பலஇடங்களிலும் சர்க்கரைக்குத் தட்டுப்பாடு நிலவிவருவதாலும் அவசியம் தேவைப்படுவதாலும் வேறுவழியில்லாமல் மக்கள் அதை வாங்குகின்றனர்.

---

# கூப்பன்களை ஒப்படைத்தார்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கைக்கடிகாரக் கடையொன்றின் உரிமையாளர் திரு. ஏ. வீரசிங்கம் தமது குடும்பத்தின் பங்கீட்டுச்சீட்டுப் புத்தகத்தையும், காரியாதிகாரியிடம் ஒப்படைத்து, பிரதமர் டட்லி சேனநாயக்காவிற்கு இதுபற்றி தெரிவித்துள்ளார்.

காரியாதிகாரிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், தனக்குச்சொந்தமான நெல்வயல்களோ, காணிகளோ இல்லாதிருந்தும், தேசிய நலன் கருதி பங்கீட்டுச்சீட்டுப் புத்தகத்தை அரசாங்கத்திடம் ஒப்படைத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

---

# வைத்தியருக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி புலோப்பளை கிராமசபையின் வைத்தியராக நியமிக்கப்பட்டுள்ள சித்த ஆயுர்வேதவைத்தியர் திரு. மு. தாமோதரம் பிள்ளையின் சேவையைப் பாராட்டுமுகமாக சுழிபுரம்மேற்கு கலைமகள் சனசமூக நிலையத்தினரால் ஒரு பாராட்டுக்கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்திற்குத் தலைமைவகித்துப்பேசிய திரு மா. மகாதேவன் திரு தாமோதரம்பிள்ளை வைத்தியத்துறையுடன் நின்றுவிடாது பொதுப்பணிகளிலும் ஈடுபட்டுத் தொண்டாற்றுபவர் எனப்பாராட்டுத் தெரிவித்தார்.

திரு. கந்தையா, திரு. மு. சிவராசா உட்பட வேறுபலரும் பேசினர். திரு தாமோதரம்பிள்ளை பாராட்டுக்கு நன்றிதெரிவித்தார்.



# பொங்கல்

திருநாளில், உங்கள் இல்லத்தில் மங்களம் உண்டாக
தமிழ் உலகில் ஒரே ஒரு சித்திரக் கலண்டர்

# லீலா

பஞ்சாங்க சித்திரக் கலண்டர்

வாங்கிவிட்டீர்களா?
இல்லையேல் உடனே வாங்குங்கள்




பொங்கல் அன்று லீலா உங்கள்
இல்லத்தை அலங்கரித்துக் காட்டும்

## லீலா பஞ்சாங்க கலண்டர்

எங்கும் கிடைக்கும்

## இன்றே வாங்குங்கள்

ஏகவிநியோகஸ்தர்:-

# லீலா ஸ்டோர்ஸ்

249, நொரிஸ் ரோட், :-: கொழும்பு-11.

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:-

## செ. ஆ. செ. & கோ.,

110, ஆஸ்பத்திரி வீதி, பெரியகடை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கரபந்தாட்டம்

## மாதகல் வென்றது

சங்கானை, வியாழன்

கடந்த 8-ந் திகதி மாதகல் இளைஞர் சங்கத்தினருக்கும், சங்கானை மேற்கு வண்டத்தரிப்பில் உள்ள இளைஞர் சனசமூகநிலையத்தினருக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கரபந்தாட்டப் போட்டியில் மாதகல் இளைஞர்கள் மூன்று போட்டிகளில் கலந்து இரண்டில் துரிதமாக விளையாடி வெற்றிபெற்றனர். இதற்கு மத்தியஸ்தராக திரு. நடராசா கடமையாற்றினர்.

உதைபந்தாட்டம்

## விவசாயிகள் சாம்பியன்

கிளிநொச்சி, வியா

கனகபுரம் விளையாட்டுக் கழகத்துக்கும் விவசாயவர்த்தகர் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் கிளிநொச்சி விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் விவசாயவர்த்தகர் விளையாட்டுக் கழகம் 1 கோலைப் போட்டு இம்முறை சாம்பியனானது.

இரு பக்க வீரர்களும் மலைத்த போட்டி போட்டு மிகவும் திறமையாக விளையாடினர். இருந்தும் போட்டி முடிவுறும் தறுவாயில் விவசாயவர்த்தகர் கழகம் மிகவும் திறமையாக விளையாடி 1 கோலைப் போட்டு வெற்றி பெற்றது.

தொடர்ந்து கனகபுரம் விளையாட்டுக் கழகம் சுவீகரித்து வந்த வெற்றிக் கிண்ணத்தை இம்முறை விவசாயவர்த்தகர் கழகம் சுவீகரித்துக் கொண்டது.

திரு. ஆர். குணரத்தினம் மத்தியஸ்தராகக் கடமை யாற்றினர்.

## குப்பிளான் வெற்றி

குரும்பசிட்டி, வியா

ஈவினை இளைஞர் கழகத்தினரும் குப்பிளான் ஞானோதய விளையாட்டுக் கழகத்தினருமிடையே நடைபெற்ற முதற்பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் இருகோஷ்டிகளையும் சேர்ந்த ஒவ்வொரு வீரர் "பவுல்" விளையாடியதால் மத்தியஸ்தரால் விளையாட்டிலிருந்து மைதானத்தை விட்டு வெளியேற்றப் பட்டனர். குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழக ஆதரவில் நடைபெற்ற இவ் வாட்டத்தில் குப்பிளான் கோஷ்டி வெற்றி பெற்றது. ஆட்ட இறுதியில் குப்பிளான் கழகம் இரு கோல்களையும் ஈவினைக் கழகம் ஒருகோலினையும் பெற்றுக் கொண்டன. திரு. ரத்னவாலசிங்கம் இப் போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமை யாற்றினர்.

ஆடவர்களுக்கு
அதிக சக்தி தேவை. வலிமிழந்து பொலிவிழந்து வாடி நிற்கும் ஆடவர்களுக்கோர் வரப்பிரசாதம்.
விட்டாடோன் வில்லைகள்
வாலிபர்களைப் போல் வலுவூட்டி இன்பம் பெருக்கி உடன் மகிழ்ந்தர உத்தரவாதமானது. பலன் ஒருபோதும் தவருது. எல்லா கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்.
விலை ரூ. 7-50
(தபால் செலவு சதம் 50)
விநியோகஸ்தர்கள்:
மெட்ரோ ஏஜென்ஸி,
235 1/1, நொரிஸ் ரோட்,
கொழும்பு.

## கொலையுண்ட பெண்ணின் கணவர் தேடப்படுகிறார்

நீர்கொழும்பு, வியா.

ஒரு 'டிரம்' பெட்டியில் என். பி. ஆரியவதி என்னும் இளம் பெண்ணினதும், குழந்தை ஒன்றினதும் சடலங்கள் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பெண்ணின் கணவரான, திவுலப்பிட்டியாவிலுள்ள வால்பிட்டியைச் சேர்ந்த டபிள்யூ. மைக்கேல் பெர்னாண்டோ மீது நீர்கொழும்பு நீதவான் திரு. டி. ஈ. தர்மசேகரா பிடி வாரந்து பிறப்பித்துள்ளார்.

நீதவான் விசாரணையின் போது, இறந்த பெண்ணின் தாயார், வீட்டுக்கருகேயுள்ள புதரொன்றில் 'டிரம்' பெட்டியைக் கண்டுபிடித்ததையிட்டு விவரித்தார்: "வேலை தேடித் தனது மகள் சென்றதாகவும், பின்னர் திரும்பவில்லையென்றும் அவர் கூறினார். பல நாட்களுக்குப்பின் தனது மகளைத் தேடிச் சென்றவிடத்து, 'டிரம்' பெட்டியைக் கண்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

பொலிசார் 'டிரம்' பெட்டியை முதலில் திறந்த பொழுது, அவர்கள் ஒரு பெண்ணின் சடலத்தை மட்டுமே கண்டார்கள். பிறகு, பிரேத பரிசோதனைக்காகப் பெண்ணின் சடலத்தை மாவட்ட வைத்திய அதிகாரி பெட்டியிலிருந்து நீக்கிய போதே, அதன் கீழ் சிசுவின் சடலமொன்றும் கிடக்கக் காணப்பட்டது.

பிரேத பரிசோதனையின் போது, இறந்த பெண்ணின் மார்பில் இரண்டு கத்திக் குத்துக் காயங்கள் இருந்ததாகக் கண்டு பிடிக்கப் பட்டது. வீட்டிலோ அல்லது 'டிரம்' பெட்டி காணப்பட்ட இடத்துக்கு அருகாமையிலோ இரத்தக்கறை எதுவும் காணப்படவில்லை.

டிசெம்பர் 31-ம் திகதி இரவு, கொலை நடந்திருக்க வேண்டுமெனப் பொலிசார் நம்புகின்றனர்.

## புதுவருட நிர்வாகிகள்

கோண்டாவில், வியா

கோண்டாவில் கிழக்கு கிராம முன்னேற்றச் சங்க நடப்பு வருட உத்தியோகத்தர்களாக திருவாளர்கள் சி, இரத்தினசிங்கம் தலைவராகவும், க. இராமநாதன் காரியதரிசியாகவும், வே, சரவணமுத்து தனாதிகாரியாகவும், க, அருமைநாயகம் உப-காரியதரிசியாகவும், மா, வீரசிங்கம் உப—தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர். 15 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## மின்சார விநியோகம்

அளவெட்டி, வியா

அளவெட்டி வடக்குப் பகுதிக்கு மின்சாரம் விநியோகிப்பது சம்பந்தமாக அண்மையில் அளவெட்டி ஐயனார் கோவில் முன்றலில் திரு. இ. அம்பலவாணர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், மல்லாகம் கிராமசபையிடம் இது பற்றிய தீர்மானங்களை விளக்கி நடவடிக்கை எடுக்க திருவாளர்கள் இ. அம்பலவாணர் பண்டிதர், க. நாகலிங்கம், த. சிவலிங்கம், ஏ. இராமசாமி, ஆ. வீ. திருஞானம் ஆகியோர்களைக் கொண்ட உபகுழுவை நியமிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

சங்கானை, வியா.

சண்டிலிப்பாய் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலிலுள்ள ஆலயக் கூட்டுப் பிரார்த்தனைச் சபையினர் பஜனை யாத்திரையாக காரைநகர் சிவன் கோவிலுக்கு சென்ற வருடங்களில் நடைபெற்றது போல இவ்வருடமும் பஜனை யாத்திரையை செய்யவிருக்கின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரகசியப் பொலிசார் திடீர்ச் சோதனை

## பத்திரிகை கந்தோரிலிருந்து மூலப்பிரதிகளை எடுத்தனர்

கொழும்பு, புதன்

இடதுசாரிப்பத்திரிகைக் காரியாலயமொன்றை இரகசியப் பொலிசார் திடீர் சோதனை செய்து சில கையெழுத்துப் பிரதிகளை எடுத்துச் சென்றுள்ளனர்.

பிரதமர் எழுதியதாக ஒரு கடிதத்தை சில தினங்களுக்கு முன் இப்பத்திரிகை ஒரு செய்தியை வெளியிட இருந்தது. இதைத் தொடர்ந்தே இரகசியப் பொலிசார் இங்கு திடீர்ச் சோதனை நடத்தினர்.

இப்பத்திரிகைமீது வழக்குத் தொடருவது பற்றி அட்டர்னி ஜெனரலின் ஆலோசனையை பொலிசார் கோரியிருப்பதாகத் தெரிகிறது.

இதே சமயம் பிரதமர் எழுதியதாக வெளியிடப்பட்டக் கடிதம் சம்பந்தமாக துண்டுப்பிரசுரங்கள் இலவற்றை வெளியிட்டது சம்பந்தமாகவும் பொலிசார் விசாரணை செய்துவந்த டிக்வலைப் பகுதியைச் சேர்ந்த பௌத்தபிக்கு மீது இலங்கை பீனல் கோரிட் 120-வது பிரிவின்படி வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. பொலிஸ் பிணையில் விடப்பட்டுள்ள பிரஸ்தாப பிக்குவை அறிவிக்கும்போது கோர்ட்டில் ஆஜராகுமாறு பொலிசார் கேட்டுள்ளனர்.

ஆலயப்பிரவேசம்

## 'எதிர்த்து வழக்காடுவோம்'

### சைவாலய தர்மகர்த்தா சபை தீர்மானம்

அளவெட்டி, புதன்

ஆலயப் பிரவேசத்துக்கு அரசாங்கம் சட்டம் கொண்டுவந்தால், அதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்காடுவதென சைவாலய தர்மகர்த்தா சபை தீர்மானித்துள்ளது.

கீரிமலை சிருப்பர் மடத்தில் சிவஸ்ரீ க. துரைசாமிக் குருக்கள் தலைமையில் தர்மகர்த்தா சபையின் மகாநாடு நடைபெற்றது. இம்மகாநாட்டிலேயே மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வேதாகமத்துக்கு விரோதமான கருத்துக்களை வெளியிடுபவர்களுக்கு எதிராக கண்டனப் பிரசுரங்கள் வெளியிட அதிகாரமளிக்கப்பட்டு, ஒரு உபகுழு நியமிக்கப்பட்டது.

மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

அரசாங்க நன்கொடையோ, அரசாங்க சம்பளமோ பெற்று நாம் கோவில்களைப் பரிபாலிக்கவில்லை. அரசியல் சட்டப்படி கோவில்கள் பரிபாலிக்கப்படுவதில்லை ஆதலின் அரசியல்வாதிகளும் அரசாங்கமும் எமது சமயத்திலும் கோவில்களிலும் தலையிடுவது பொருத்தமற்றது.

சத்தியாக்கிரகம் செய்தால் சட்டபூர்வமான நடவடிக்கை எடுப்பது.

சைவாலய விஷயங்களில் அரசாங்கமோ, அரசாங்க அதிபரோ அரசாங்க ஊழியர்களோ பிற சமயத்தவர்களோ தலையிட்டு சமயசுதந்திரத்தைப் பாதிப்பது அநீதி என மகாநாட்டில் பேசியவர்களும் கண்டனம் தெரிவித்தார்கள்.

## பலாத்காரவழக்கு: எதிரிகள் விடுதலை

ஊர்காவற்துறை, புதன்

நெடுந்தீவு மேற்கைச்சேர்ந்த யோகபுஷ்பம் என்னும் 14வயது யுவதியைப் பலாத்காரம் செய்ய முயன்றதாக அதே இடத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் சதாசிவம், நடராஜா ஆகிய இருவர் மீதும் தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரிகள் சார்பில் புரக்டர் எம். வி. கதிரவேலு ஆஜரானார். விசாரணையின் பின் சாட்சியம் திருப்திகரமாய் இல்லாமையால் நீதிபதி திரு. வி. ஜே. இராசரத்தினம் எதிரிகளை விடுதலை செய்தார்.

## துப்பாக்கி சூட்டுக்கு இலக்கானவர் மரணம்

யாழ்ப்பாணம், வியா.

ஊர்காவற்றுறையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலத்த காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட கரையூரைச் சேர்ந்த குசைப்பிள்ளை பொன்னுத்துரை (வயது 38) என்ற நபர் நேற்றுக் காலை மரணமானார்.

இவர் இம்மாதம் 6-ம் திகதி ஊர்காவற்றுறையிலுள்ள மண்கும்பான் என்னும் இடத்தில் வலைக்காவல் செய்து கொண்டிருக்கையில், இவர் தெரியாத சில நபர்கள் வள்ளமொன்றில் வந்து வலைகளைக் களவெடுத்துக்கொண்டு சென்றதாகவும், வேறொரு படகில் இன்னும் இருவருடன் அவர்களைக் கடலில் துரத்திக் கொண்டு செல்கையில் அவர்கள் துப்பாக்கியால் சுட்டதால் இவர் படுகாயமடைந்ததாகவும், அதன் பின்னர் இவரை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாகவும் பொலிசார் நடத்திய விசாரணையின் போது தெரியவந்துள்ளது. விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது. (த. நி.)

## அமெரிக்காவில் வரி உயர்வு

வாஷிங்டன், ஜன. 11

அமெரிக்காவில் 6 சதவிகித வரிஉயர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வரி உயர்வுக்கு வியட்நாம் யுத்தமே காரணமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலைக் கடிதம்

# திருமலையில் பரணுக்கும் 'கியூ'

## உணவுப்பொருள்கள் விலை அதிகரிப்பு

— நமது நிருபர் —

பங்கீட்டு அரிசி குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து திருக்கோணமலையில் பாண் விற்பனைக்கு அதிகமான ஆதரவு கிடைத்துள்ளது. நேற்று முன்தினம் காலை இங்கு பிரதான வீதியில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் ஒரு பேக்கரி வழியாக எமது நிருபர் சென்றபோது அங்கு 'கியூ'வில் மக்கள் காத்து நின்று பாண் வாங்கிய காட்சியைக் கண்டார்.

### கவனிப்பாரற்றுக் கிடக்கும் புகையிரதக் கடவை

திருக்கோணமலை ரயில் நிலையத்திலிருந்து சுமார் 400 யார் தூரத்திலுள்ள மட்டிக் கழி என்னும் இடத்தில் இருக்கும் புகையிரதக் கடவை கவனிப்பாரற்று காவலர்கள் இன்றி இருக்கின்றது. இது வழியாகச் செல்லும் மோட்டார் வண்டிகள் பெரும் ஆபத்தையே எதிர்நோக்கிய வண்ணம் செல்லுகின்றன. குறிப்பிட்ட ரயில் கடவையில் ஏராளமான விபத்துகள் ஏற்பட்டிருந்தும் கூட இந்த இடத்தில் தக்க பாதுகாப்பு இல்லாமலிருக்கிறது. இதே போல இவ்விருந்து சுமார் 5 மைல் தூரத்திலுள்ள சீனக்குடா என்னும் கிராமத்திலுள்ள ரயில் கடவையும் பாதுகாப்பற்றிருக்கிறது. இவ்வழியால் மோட்டார் வாகனங்கள் செல்லும் போது இக்கடவையை நெருங்கிய பின்புதான் இரு மருங்கிலும் பார்வையைச் செலுத்த முடியும். பாதையின் இரு மருங்கிலும் அடர்த்தியான காடுகள் இருப்பதும், இக் கடவை ஒரு குருட்டுத் திருப்பத்தில் அமைந்திருப்பதுமே இதற்குக் காரணமாகும்.

### காடு .. டாகிறது

திருக்கோணமலை நகரசபை எல்லைக்குட்பட்ட ''ஓர்ஸ் ஹில்'' என்னுமிடத்தில் அரசாங்கத்துக்குச் சொந்தமான காடுகளில் இங்குள்ள மக்கள், மரங்களை வெட்டி, சுத்தப்படுத்தித் தமக்கு வீடுகள் கட்டி வருகின்றனர். இக் குறிப்பிட்ட காணி, முன்னர் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கென்று ஏற்கவே ஒதுக்கப்பட்டிருந்தது என்று கூறப்படுகிறது. ஆசிரியத் தொழிலில் உள்ளவர்கள் சிலர் இக்காணியில் வேறொரு இடம் தமக்கு வேண்டுமென்று அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரியவருகிறது. சட்டத்துக்கு விரோதமானது என்று கருதும் நகரபாதுகாவலர் இவர்களைப் பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்துச் சென்று விசாரணை செய்கின்றனர். குறிப்பிட்ட காணி, திருக்கோணமலை மாவட்ட நீதிபதி, காட்டு இலாகா உத்தியோகஸ்தர் ஆகியோர் வாசஸ்தலங்களுக்கு எதிரே உள்ளது.

### 'அரசாங்கம் தவறிவிட்டது'

''இன்று இலங்கை மக்கள் மிகவும் கஷ்டத்துக்குள் ஆகியிருக்கின்றது இலங்கை அரசாங்கம் பங்கீட்டரிசிக் குறைப்பினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இதனால் அரசாங்கம் தனது கடமையில் நின்றும் தவறிவிட்டது.''

இவ்வாறு திருக்கோணமலையிலுள்ள இலங்கை வர்த்தக கிப்பந்திகள் சங்கத்தின் தேயிலை நிர்வாக ஸ்தாபனக்கிளைக் காரியதரிசியான திரு. எஸ். ஜீவராசா அண்மையில் நடைபெற்ற இளைப் பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார். இளைச் சங்கத்தின் தலைவர் திரு. து. பாலேந்திரா இக்கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

வெளிநாட்டுச் செலாவணியைப் பெருக்கத் தவறியது அரசாங்கம் செய்த பெரும் குற்றமாகும், இது காரணமாகத் தான் இன்று நாட்டில் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டவுடன் இந்நாட்டில் ஏனைய உணவுப் பொருட்களின் விலைகளும் திடீரென உயர்ந்து விட்டது'' என்றும் அவர் கூறினார்.

திருக்கோணமலைத்துறைமுக நெருக்கடி சம்பந்தமாக இலங்கை வர்த்தக கிப்பந்திகள் சங்கத்தினால் ஏற்பாடாகியிருக்கும் ஒரு நாளைய அடையாள வேலைநிறுத்தத்தைத் திருக்கோணமலை தேயிலை நிர்வாகஸ்தாபனத்திலுள்ள சங்க அங்கத்தவர்கள் யாவரும் எதிர் வரும் 16-ம் திகதி முழுநாளும் அமுலாக்க வேண்டும் என்றும் இது சம்பந்தமாக மிக விரைவில் ஒருபொதுவேலைநிறுத்தத்தையும் ஆரம்பித்து அதைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என்றும் கிளைச்சங்கத்தின் உபதலைவர் திரு. தேமண்ட் ஜோன்சன் கொண்டுவந்த பிரேரணை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

# தேயிலை ஏற்றுமதியை பகிஷ்கரிக்க முடிவு

கொழும்பு, புதன்

கொழும்புத் துறைமுகத்திலிருந்து தேயிலை ஏற்றுமதிசெய்வதை பகிஷ்கரிக்கப்போவதாக இலங்கை வர்த்தக கிப்பந்திகள் சங்கம் தெரிவித்துள்ளது.

திருகோணமலைத் துறைமுகத்தில் நடைபெற்ற வேலைநிறுத்தமும் அதைத் தொடர்ந்து துறைமுக ஊழியர் வேலைநீக்கமும் செய்யப்பட்டதையும் தொடர்ந்து திருகோணமலைத் துறைமுகம் மூலமாக ஏற்றுமதி செய்யப்பட்டுவந்த தேயிலை கொழும்புத்துறைமுகம் மூலமாக ஏற்றுமதி செய்யப்பட்டுவந்தது.

இதனால் கொழும்புத் துறைமுகத்திலிருந்து தேயிலை ஏற்றுமதி செய்வதை இம்மாதம் 16ம்திகதி தொடக்கம் பகிஷ்கரிக்கப் போவதாக இலங்கை வர்த்தகசிப்பந்திகள்சங்கம் அறிவித்துள்ளது.

தேயிலை ஏற்றுமதியைப் பகிஷ்கரிக்கும் ஊழியர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று துறைமுக கட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. பகிஷ்கரிப்பு நடைபெற்றால் தங்களுடன் செய்து கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தம் ரத்தாகிவிட்டதாகக் கருதப்படுமென்று முதலாளிமார் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

## போர்னியோ செல்லவிருந்தவர் ஏற்புவலியால் மரணம்

கொம்பனித்தெரு, புதன்.

போர்னியோ செல்வதற்காக அம்மைப்பால் குத்திய நிம்பிரிக்கலைச் சேர்ந்த ஆசிரியை ஜராங்கனி ஏற்புவலியினால் மரணமானார். இம்மரணம் சம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு எம். எச். இஸ்மயில் மரணவிசாரணை நடத்தினார்.

இறந்தவரின் கணவரான சிரசாகன்னங்கரா சாட்சியமளிக்கையில் கூறியதாவது: நாங்கள் இருவரும் பெற்றோருக்கு விருப்பமில்லாது திருமணப்பதிவு செய்து கொண்டோம். எங்களுக்கு போர்னியோ செல்வதற்கு அரசாங்கத்தால் உபகாரச் சம்பளம் கிடைத்தது. போர்னியோ போவதற்காக என் மனைவி ஜராங்கனி அம்மைப்பால்குத்திக் கொண்டார். பால்குத்தி இரண்டு மூன்று நாட்களில் சுகயீனம் ஏற்பட்டது. இதனால் தண்ணீர் சாப்பாடு கூடஅவரால் அருந்த முடியவில்லை. இதனால் பேசமுடியாது களைத்து செயல் அற்றுப் போய்விட்டார். பின்னர் மரணமானார்.

மரணவிசாரணை அதிகாரி அம்மைப்பால் குத்திய புண்ணில் இருந்து ஏற்புவலிஏற்பட்டதால் மரணம் ஏற்பட்டது என்று தீர்ப்புக்கூறினார்.

## மாமி மருமகள் தகராறு; மாமி மரணம்

கழிபுரம், புதன்

மாமியாரை மருமகள் இரும்பு உலக்கையால் தாக்கியதால் அவர் மரணமடைந்த சம்பவம் வட்டுக்கோட்டையில் நடைபெற்றுள்ளது.

புங்குடுதீவைச் சேர்ந்த மீனாட்சி அம்பிகைபாகன் (24 வயது) என்ற இளம் பெண் சித்தசுவாதீனம் காரணமாக வட்டுக்கோட்டையிலுள்ள சித்த ஆயுர்வேத வைத்தியரின் இல்லத்தில் சிகிச்சை பெறுவதற்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். இவருக்கு உதவியாக இவரது மாமியார் நாகம்மா அம்பாம்பிள்ளையும்கூடவிருந்தார். அப்போதுதான் தனது மாமியாரை மீனாட்சிஇரும்பு உலக்கையால் தாக்கினார்.

மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். நிற்பிகா சுந்தரனே பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். கி. செண்டினின் உதவியுடன் விசாரணை நடாத்தினார். மீனாட்சி அம்பிகைபாகனை பிணையில் விடுவிக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

மத்தியவங்கி ஊழியர்

## வேலைநிறுத்தம் நீடிக்கிறது

கொழும்பு, புதன்

மத்தியவங்கி ஊழியரின் வேலைநிறுத்தம் நீடிக்கிறது. வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்குத் தெரிவிக்கப்பட்ட சமரசத்திட்டம் மத்தியவங்கி கவர்னரிடமிருந்து வரவேண்டுமென்றும் 'வெளியாரான' தொழில் மந்திரியிடமிருந்து வரும் திட்டத்தை ஏற்க முடியாதென்றும் வேலைநிறுத்தம் செய்யும் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

### பல்வைத்தியர்

பல்வைத்தியர்களின் வேலைநிறுத்தமும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜனவரி 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org